வானவில்

VAANAVIL

இதழ் 161 வைகாசி 2024

ISSUE 161 May 2024

# தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு சரியானதா?

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்கள் படிப்படியாகச் சூடு பிடித்து வருகின்றன. (சொல்ல முடியாது, திடீரென்று முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவும் கூடும்)

ஜனாதிபதித் தேர்தல் நடந்தால், அதில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, ஜே.வி.பி. – தேசிய மக்கள் சக்தி என்பனவற்றின் தலைவர் அனுர குமார திசாநாயக்க ஆகியோர் தயாராக இருக்கின்றனர்.

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையில் மிகப்பெரிய வாக்குவங்கியை வைத்திருக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறீலங்கா பொதுஜன பெரமுன (பொதுமக்கள் முன்னணி) நேரடியாகப் போட்டியிடவில்லை. ஆனால் அவர்களது ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைக்கும் எனத் தெரிகிறது.

சில கணித விற்பன்னர்கள் சிங்கள மக்களின் சனத்தொகை நாட்டின் மொத்த சனத்தொகையில் சுமார் 75 சதவீதம் வரை இருப்பதால் (2012 இல் எடுத்த சனத்தொகை புள்ளி விபரத்தின்படி 74.9 வீதம்), அவர்களின் வாக்குகள் தேர்தலில் போட்டியிடும் மூன்று சிங்கள வேட்பாளர்களுக்கும் சமமாகப் பிரிந்து கிடைக்கும் என்றும், எனவே சனத்தொகையில் எஞ்சிய 25 வீதமாக இருக்கும் சிறுபான்மை இனங்களின்




வாக்குகளை மேலதிகமாகப் பெறுபவர் ஜனாதிபதியாகத் தெரிவாகும் வாய்ப்பு உள்ளது எனவும் கூறி வருகின்றனர்.

முன்பும் இவ்வாறு சிறுபான்மை இனங்களின் வாக்குகள் கிடைத்தால் மட்டுமே இலங்கையில் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும் எனக் கூறியவர்களும் உண்டு. அதில் ஓரளவு உண்மையும் உண்டு. உதாரணத்துக்கு, 2015 இல் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவானதிற்கு சிறுபான்மை இனங்களின் வாக்குகளும் கணிசமாக உதவின.

ஆனால், வேறு இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் சிறுபான்மை இனங்களின் வாக்குகள் சரத் பொன்சேகாவுக்கும், சஜித் பிரேமதாசவுக்கும் போடப்பட்டும் அவர்களால் வெற்றியீட்ட முடியவில்லை. அதேநேரத்தில், மகிந்த ராஜபக்சவும், கோத்தபாய ராஜபக்சவும் பெரும்பாலும் அதிகப்படியான சிங்கள வாக்குகளாலேயே ஜனாதிபதிகளாகத் தெரிவானார்கள்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் வெற்றி பெறுவதற்கு நிலையான வாக்குச் சூத்திரம் எதுவும் கிடையாது. வெற்றி பெறும் வேட்பாளரும் அவரது கட்சியும் செய்யும் பிரச்சாரங்களின் அடிப்படையிலும், மக்களின் அந்த நேரத்து மனநிலை அடிப்படையிலேயுமே அவர்களது வெற்றி அமைந்து வந்துள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது. ஆனாலும் நாட்டிலுள்ள அப்போதைய நிலைமைகளுக்கு ஏற்ப தேர்தலுக்குத் தேர்தல் நிலைமைகள் மாறலாம்.

இத்தகைய ஒரு சூழலில்தான், இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் சார்பாக பொது வேட்பாளர் ஒருவரைப் போட்டிக்கு நிறுத்த வேணடும் என்ற கோரிக்கை சில தமிழர் தரப்புகளிலிருந்து எழுந்துள்ளது. (இங்கு தமிழர்கள் என்று அவர்கள்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# ஜூலியன் அசாஞ்சேயின் 12 வருடப் போராட்டம்

**வி**க்கிலீக்ஸ் (WikiLeaks) இணையத்தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ்சே (Julian Assange)வை அமெரிக்காவிடம் ஒப்படைப்பதற்கு எதிராக மேல்முறையீடு செய்யும் உரிமைக்கான அனுமதியை இரண்டு பிரித்தானியா நீதிபதிகள் மே 20 அன்று வழங்கியுள்ளனர். அவர் இலண்டனில் உள்ள பெல்மார்ஷ் (Belmarsh) அதிகபட்ச பாதுகாப்புச் சிறையில் வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில், அமெரிக்க உளவுச் சட்டத்தின் கீழ் ஆயுள் தண்டனை விதிக்கக்கூடிய குற்றச்சாட்டை எதிர்கொள்ளவும், அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்தும் கடந்த ஐந்து ஆண்டுகளாக அவர் போராடி வருகிறார்.

அவுஸ்திரேலியாவை சேர்ந்த பத்திரிகையாளர் 52 வயதான ஜூலியன் அசாஞ்சே 2006 ஆம் ஆண்டில் விக்கிலீக்ஸ் என்ற இணையத்தை சுவீடனைத் தளமாகக் கொண்டு தொடங்கினார். ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் மீது அமெரிக்கா தொடுத்திருந்த போர் தொடர்பான இரகசிய ஆவணங்கள் இந்த இணையத்தில் 2010 இல் வெளியாகின.

இந்த ஆவணங்களின் ஒரு பகுதியை அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் (Pentagon) இல் வேலை செய்த செல்சி மேனிங் (Chelsea Manning) என்பவரே விக்கிலீக்ஸிற்கு வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக செல்சி மேனிங் 2010 இல் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அவருக்கு 35 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர், இறுதியாக ஒபாமா ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் (2017) மன்னிப்பு வழங்கப்பட்டு சிறையிலிருந்து விடுதலையானார்.

விக்கிலீக்ஸ் ஆவணங்களில் அமெரிக்க இராணுவத்தின் பல்வேறு போர்க்குற்றங்கள் அம்பலப்படுத்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவை உளவு பார்த்ததாக, அமெரிக்கச் சட்டத்தின் கீழ், விக்கிலீக்ஸ் மற்றும் அசாஞ்சே மீதான குற்ற விசாரணையை அமெரிக்கா தொடங்கியது.

இந்தச் சூழலில் பாலியல் தொந்தரவு குறித்த வழக்கில் ஜூலியன் அசாஞ்சேவை கைது செய்ய 2010 ஆம் ஆண்டு நவம்பரில் சுவீடன் நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது. அவ்வேளையில் இலண்டனிலிருந்த அசாஞ்சே கைது செய்யப்பட்டு, இரண்டு முறை பிணையில் வெளிவந்தார்.

2012 ஆம் ஆண்டு அசாஞ்சே அவர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகளை எதிர்கொள்ள சுவீடனிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென பிரித்தானியா உச்ச நீதிமன்றம் கூறியது. சுவீடனுக்கு நாடு கடத்தப்பட்டால், சுவீடன் அரசு தன்னை அமெரிக்காவிடம் ஒப்படைக்கலாமென அவர் அஞ்சினார். எனவே அதிலிருந்து தப்பிக்க, 2012 ஆம் ஆண்டு இலண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் அவர் அரசியல் தஞ்சமடைந்தார்.

அசாஞ்சே மீதான பாலியல் வழக்கு குறித்த புகாரின் விபரங்களைப் படித்தால், இந்த வழக்கு பொய்யாகப் புனையப்பட்டது என்ற சந்தேகம் வலுத்தது. இதனால், 2017 இல் அவருக்கு எதிரான வழக்கை சுவீடன் கைவிட்டது. உலக நாடுகளில் அதிகார வர்க்கத்தை எதிர்க்கும் முக்கியமான நபர்கள் மீது அழுத்தங்களைக் கொடுப்பதற்காக பாலியல் புகார்கள் ஆயுதங்களாக பயன்படுத்தப்படுகின்றன என்பதற்கு அசாஞ்சேக்கு எதிராக சுவீடனில் தொடரப்பட்ட வழக்கு ஓர் உதாரணமாகும்.

அசாஞ்சேக்கு வழங்கப்பட்ட தூதரக அடைக்கலத்தை 2019 ஆம் ஆண்டு ஈக்குவடோர் அரசு மீளப்பெற்றது. இதனைத் தொடர்ந்து, பிரித்தானியா பொலீஸாரால் ஜூலியன் அசாஞ்சே கைது செய்யப்பட்டு கடந்த 5 ஆண்டுகளாக இலண்டனில் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவை உளவு பார்த்தது, இராணுவ இரகசியங்களை திருடியது உட்பட 17 குற்றச்சாட்டுகள் அசாஞ்சே மீது அமெரிக்காவால் சுமத்தப்பட்டுள்ளன. இதனால் அவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்க அரசு கோரிக்கை விடுத்திருந்தது. அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரித்தானியா உள்துறை அமைச்சகம், அவரை நாடு கடத்த 2022 ஜூனில் ஒப்புதல் வழங்கியது.

இதேவேளையில் ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்பட்டால், மரண தண்டனை விதிக்கப்படாதென்ற உத்தரவாதத்தினை அமெரிக்க அரசு அளிக்குமா என பிரித்தானிய உயர் நீதிமன்ற நீதிபதிகளான விக்ரோறியா ஷார்ப் (Victoria Sharp) மற்றும் ஜெரமி ஜோன்சன் (Jeremy Johnson) ஆகியோர் கேள்வி எழுப்பி, அதற்கு கடந்த ஏப்பிரல் 16ம் திகதிக்குள் பதிலளிக்குமாறு உத்தரவிட்டிருந்தனர். அவ்வாறு உத்தரவாதங்கள் எதுவும் கிடைக்காவிட்டால், அசாஞ்சே பிரித்தானியாவில் மேல்முறையீடு செய்ய அனுமதி வழங்கப்படும் என்றும் நீதிபதிகள் கூறியிருந்தனர்.

விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்களை செய்திகளாக்கி தங்களது வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்ட நியூயோர்க்ஸ் டைம்ஸ், தி கார்டியன், சிஎன்என், பிபிசி போன்ற கோர்ப்பரேட் நிறுவனங்களின் நிர்வாகங்கள், ஏன் இப்போது அசாஞ்சேயை விடுதலை செய்யுங்கள் என்று எழுத மறுக்கின்றன?

மேற்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு மனித உரிமைகள் மற்றும் போர்க்குற்றங்கள் பற்றி வாய்வலிக்க கத்துகிறார்கள், ஆனால் ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்க இராணுவம் நடத்திய கொடூரமான படுகொலைகளை வீடியோ ஆதாரங்களாக சர்வதேசத்திற்கு வெளிப்படுத்திய அசாஞ்சேவை சிறையிலடைத்து வேடிக்கை பார்க்கிறார்கள். ஒரு பத்திரிகையாளராக அவர் தனது வேலையை செய்தது எவ்வாறு குற்றமாகும்?


**வானவில்**


***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com
*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*
***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*


**புரட்சிகர மே தின வாழ்த்துக்கள்!**

சர்வதேச ஐக்கியம் மற்றும் தோழமையுணர்வு என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த மனித குலத்தின் அமைதி மற்றும் மகிழ்வான எதிர்காலத்திற்காக போராடி வரும், உலகெங்கிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தை மே தினத்தன்று நாங்கள் வாழ்த்துகிறோம்.

**–ஆசிரியர் குழு**

# சுதந்திரக் கட்சியை உள்ளிருந்து அரிக்கும் கறையான்கள்!



இலங்கையில் உருவான பிரதான கட்சிகளில் சிறீலங்கா சுதந்திர கட்சி ஒரு முக்கியமான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சியாகும். அந்தக் கட்சியை உருவாக்கிய எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க ஒரு தீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் தேசியவாதியாகவும் இருந்தார். அவர் 1959 இல் பிற்போக்கு சக்திகளால் படுகொலை செய்யப்பட்ட பின்பு சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற அவரது மனைவி திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவும் கணவரின் கொள்கை அடிச்சுவட்டையே பின்பற்றினார். அரசியலில் அவர்கள் இருவரும் இடதுசாரிக் கட்சிகளுடனேயே கூட்டு வைத்திருந்தனர்.

அதன் காரணமாகவே சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளால் பல ஏகாதிபத்திய எதிர்ப்பு – முற்போக்கு நடவடிக்கைகளை எடுக்க முடிந்தது. இருப்பினும், சுதந்திரக் கட்சி ஒரு முதலாளித்துவக் கட்சி என்ற வகையில் அதனுள் எப்பொழுதும் ஒரு சிறிய அளவிலான வலதுசாரிப் பிரிவும் இருந்து வந்துள்ளது. அவர்கள் காலத்துக் காலம் சுதந்திரக் கட்சி அரசுகள் எடுத்த முற்போக்கான நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டும் வந்துள்ளனர்.

பண்டாரநாயக்க காலத்தில் அத்தகைய ஒரு வலதுசாரிப் பிரிவினரே இனப்பிரச்சினைக்கு தீர்வாக 1957.ல் பண்டாரநாயக்க அரசு உருவாக்கிய "பண்டாரநாயக்க – செல்வநாயகம்" உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த விடாமல் ஐக்கிய தேசியக் கட்சி வெளியில் எதிர்ப்பு நடவடிக்கைகளை உருவாக்கிய போது, அதற்கு ஆதரவாக உள்ளிருந்து செயல்பட்டவர்கள்.

பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்க காலத்திலும் இத்தகைய வலதுசாரி பிரிவு ஒன்று இருந்தது. முதலில் அப்பிரிவு சி.பி.டி. சில்வா தலைமையில் செயல்பட்டது. அவர்களே 1964ஆம் ஆண்டு சிறீமாவோ அரசு லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தை தேசியமயமாக்க கொண்டு வந்த சட்டமூலத்தைத் தோற்கடிக்க காரணமாகவிருந்து அந்த அரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தவர்கள்.

பின்னர் அத்தகைய வலதுசாரி பிரிவு சிறீமாவோ ஆட்சிக் காலத்தில் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க தலைமையில் செயற்பட்டது. அந்த அணியிலேயே பண்டாரநாயக்க தம்பதிகளின் ஏக புதல்வர் அனுர பண்டாரநாயக்கவும் இருந்தார். (அனுர பிறிதொரு கட்டத்தில் வலதுசாரி கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் நேரடியாகவும் இணைந்து, அக்கட்சியின் சார்பாக நாடாளுமன்ற சபாநாயகராகவும் பதவி வகித்தார்) அந்த அணியே 1976இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், அரசின் பங்காளிகளாக இருந்த இரு இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தி, 1977 பொதுத்தேர்தலில் சுதந்திரக் கட்சியின் படு மோசமான வீழ்ச்சிக்கு வழிவகுத்தவர்கள்.


இப்பொழுது சுதந்திரக் கட்சி அதன் தெளிவற்ற கொள்கைகளாலும், ஆளுமையற்ற தலைமைத்துவத்தாலும் வலுவிழந்து நாட்டின் அரசியல் அரங்கில் மூன்றாவது அல்லது நாலாவது இடத்துக்கு தள்ளப்பட்டுவிட்டது. அத்துடன் அக்கட்சி பல கூறுகளாகப் பிளவடைந்தும் உள்ளது. அவ்வாறு பிளவடைந்த ஒரு அணிக்கு கட்சியின் பழம் பெரும் உறுப்பினர்களில் ஒருவரான நிமால் சிறீபால டி சில்வா தலைமை வகிக்கிறார். அவர்தான் சுதந்திரக் கட்சியின் தற்பொழுதைய வலதுசாரி அணிக்கு தலைமை தாங்குகிறாரா என்ற சந்தேகத்தை அவரது அண்மைய உரை ஒன்று எடுத்துக் காட்டியிருக்கிறது.

சுதந்திரக் கட்சியின் நீண்டகாலத் தலைவராகவும், பலமுறை பிரதமராகவும் இருந்த திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவின் 108 ஆவது பிறந்ததின வைபவத்தில் பேசிய சில்வா, "கலாவதியாகிப்போன சோசலிச தத்துவத்தை வைத்துக்கொண்டு ஒரு கட்சியோ, நாடோ முன்னேற முடியாது" என பேசியிருக்கிறார். புதிய உலக ஒழுங்கில் அரசியல் கட்சிகள் இணைய வேண்டும் என அவர் பேசியிருப்பது, ஏகாதிபத்தியத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் உலகமயப் போக்கில் இணைய வேண்டும் என்பதையே.

"Neither a party nor a country can go forward with a socialist political philosophy, which is already outdated, and therefore, political parties and individuals must be updated with the new world order" opined the Sri Lanka Freedom Party (SLFP) Acting Chairperson, Minister Nimal Siripala de Silva.

இப்படியானவர்கள் இருக்கையில் எவ்வாறு சுதந்திரக் கட்சி தனது பாரம்பரிய கொள்கைகளை மீண்டும் வரித்துக்கொண்டு, புத்தெழுச்சி கண்டு மீண்டும் அரசியல் அரங்கில் முன்னுக்கு வரமுடியும்?

# அதி பயங்கர ஏகாதிபத்தியம்



ஏப்ரல் 18 –20 திகதிகளில் வெனிசுவேலா தலைநகர் காரகஸ்ஸில் ‘சமூக மாற்றுக்கானதொரு உலக சங்கமம்’ (World Gathering for a Social Alternative) நடைபெற்றது. வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, பொலிவியா முன்னாள் ஜனாதிபதி ஈவோ மொரேல்ஸ், ஹோண்டுரஸ், கியூபா தலைவர்கள் உட்பட உலகம் முழுவதிலுமுள்ள 500 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் இதில் பங்கேற்றனர். **இதில் பங்கேற்று, மார்க்சிய அறிஞர் பேராசிரியர் விஜய் பிரசாத் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

சீரழிவை நிராகரித்து உறுதியான வாழ்க்கைக்கான வழியாக கம்யூனிஸ்ட்களின் மாற்று திட்டத்தை உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான மக்கள் பார்க்க வேண்டும். சீரழிவைத் தரும் முதலாளித்துவத்தை நிராகரிப்பது மட்டுமல்லாமல், சோசலிசத்தை தழுவிக்கொள்ளவும் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகள் காட்டுமிராண்டித்தனமானவை. கொடூரமானவை. ஏகாதிபத்தியம் என்ற வார்த்தை எவ்வளவு கொடூரமானது, எவ்வளவு மிருகத்தனமானது, எவ்வளவு காட்டு மிராண்டித்தனமானது. அது எளிய மக்களின் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்காதது. தற்போது அந்த ஏகாதிபத்தியத்தால் காஸாவில் 15 ஆயிரம் குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 5 ஆயிரம் குழந்தைகளைக் காணவில்லை. மேலும் அதிகாராப்பூர்வ கணக்கைத் தாண்டி 50,000 பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

**மிகை ஏகாதிபத்தியம்**

இது தான் ஏகாதிபத்தியத்தின் கொடூரமுகம். நாங்கள் தற்போது ‘மிகை ஏகாதிபத்தியம்’ (Hyper imperilism) என்ற வார்த்தையை பயன்படுத்த துவங்கியுள்ளோம். ஏகாதிபத்தியத்தின் மிருகத்தனத்தை, அந்த காட்டு மிராண்டித்தனத்தை குறிப்பிடுவதற்காக இந்த பதத்தை பயன்படுத்துகிறோம்.

**75 சதவீதம் இராணுவச் செலவு**

அமெரிக்கா தலைமையிலான ‘மிகை ஏகாதிபத்தியம்’ (மிக மிக அதீதமான, மிகக் கொடூரமான ஏகாதிபத்தியம்) என்பது ஆபத்தானது. அது உலகிற்கு சீரழிவுகளை கொடுத்து வருகிறது. உலகளவில் இராணுவத்திற்காக மட்டுமே அமெரிக்காவும் அதன் நேட்டோ கூட்டாளி நாடுகளும் 75 சதவீதம் வரை செலவிடுகின்றன. உண்மை நிலைமை இவ்வாறு இருக்க, சீனாவும் ரஷ்யாவும் அச்சுறுத்தலை உருவாக்குகின்றன எனக் கூறுகிறார்கள். அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் இந்த பிரச்சாரத்தில் உண்மை இல்லை. உலக இராணுவச் செலவில் 10 சதவீதம் தான் சீனா செய்கிறது. 75 சதவீதம் வரை செலவு செய்யும் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளை விட சீனாவும் ரஷ்யாவும் எப்படி அச்சுறுத்தல் தரும் நாடுகளாக மாறும்? வெனிசுவேலாவும் கியூபாவும் எப்படி அச்சுறுத்தல் தரும் நாடுகளாக மாறும்?

இந்த உலகத்திற்கு ஒரேயொரு அச்சுறுத்தல் தான் உள்ளது. அது அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளாலும் முன்னெடுக்கப்பட்டு வரும் ‘மிகை ஏகாதிபத்தியமே’ ஆகும். இந்த உலகத்தில் உள்ள ஒரே பயங்கரவாதி ‘அமெரிக்க அரசும் இஸ்ரேல் உள்ளிட்ட அதன் நெருங்கிய நட்பு நாடுகளும்’ மட்டுமே. அவர்கள் மட்டும் தான் பயங்கரவாதிகள். இன்று நமது பூமி எதிர்கொள்ளும் மிகப்பெரிய அச்சுறுத்தலே அவர்கள் தான். அந்த அச்சுறுத்தலின் உச்சக்கட்ட வடிவம்தான் மிகை ஏகாதிபத்தியம் அதாவது அதிபயங்கர ஏகாதிபத்தியம்.

**உலக மக்களின் மதிப்பைப் பெறாத மேற்கத்திய தலைவர்கள்**

மேற்கத்திய நாடுகளை வழிநடத்துபவர்களான ஜோ பைடன், ஓலோஃப் ஸ்கோல்ஸ், ரிஷி சுனக், இமானுவேல் மேக்ரான் ஆகியோரில் ஒருவர் கூட உலக மக்களின் மதிப்பைப் பெற்றதில்லை. அளவுக்கு அதிகமான செல்வத்தைக் கொண்ட இந்த நாடுகளால் ஓர் அறிவார்ந்த சிறந்த தலைவரைக் கூட உருவாக்க முடியவில்லையே, ஏன்? பாரிஸ் கம்யூன் அமைத்து புகழ்பெற்ற நாடு பிரான்ஸ். பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற நாடு பிரான்ஸ். அது மட்டுமல்ல, ஜீன் பால் சார்ட் போன்ற தத்துவவாதிகள் உருவான நாடு. அது எப்படி இம்மானுவேல் மேக்ரானை உருவாக்கியது? பிரான்ஸ் உள்ளிட்ட அத்தகைய ஐரோப்பா, இப்போது தத்துவவாதிகளை உருவாக்கவில்லை. இன்று ஜெர்மனியில் ஹெகல் இல்லை. பிரான்சில் மட்டுமல்ல அமெரிக்காவில் கூட உண்மையான அறிவுஜீவிகள் யாரும் உருவாக்கப்படவில்லை.

**முதலாளித்துவத்தில் ஆக்கப்பூர்வ திட்டம் இல்லை**

ஏனென்றால் அவர்களிடம் ஆக்கப்பூர்வமான ஒரு திட்டம் கூட இல்லை என்பதுதான் பிரச்சனை. அவர்கள் மனிதகுலத்தின் இயக்கவியலைப் புரிந்து கொள்ளவில்லை. மக்களின் வறுமையை எப்படிப் போக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. அதன் அர்த்தம் என்னவென்று அவர்களுக்குப் புரியவில்லை – நம் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க அல்லது உலகிற்கு உதவும் எந்த ஒரு உண்மையான திட்டமும் அவர்களிடம் இல்லை. கொரோனா பரவிய போது உலகளாவிய வடக்கு நாடுகளின் முழுமையான சரிவை நாங்கள் கண்டோம். கொரோனா தொற்றுநோய்க்கு முன் 2008 ஆம் ஆண்டு உலகளவில் ஏற்பட்ட நிதி நெருக்கடியின் நீண்ட கால

பிரச்சனையில் இருந்து அவர்கள் மீளவில்லை. வீடற்ற நிலை, இனவெறி, தன்பாலினத்தவர்களின் உரிமை என பலரும் உரிமைகளுக்காக போராடுவதைப் பார்க்கிறோம். ஆயினும் மக்கள் பிரச்சனைகளை தீர்க்க ஏகாதிபத்திய சக்திகளிடம் எந்த திட்டமும் இல்லை, யோசனைகளும் இல்லை.

அதி பயங்கர ஏகாதிபத்தியம் மிக ஆபத்தானது. அவர்கள் இனி மக்களின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை உருவாக்க மாட்டார்கள். மாறாக அவற்றை எப்படி அழிக்க வேண்டும் என்பது மட்டுமே அவர்களுக்குத் தெரியும். அவர்களால் மக்களின் வளர்ச்சியை அழிக்க முடியுமே தவிர, அதை எப்படி உருவாக்குவது எனத் தெரியாது. மக்களின் வளர்ச்சிக்கு தேவையானவற்றை உருவாக்கும் அளவிற்கு அவர்களிடம் பணம் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு பள்ளிக்கூடங்களை கட்டுவதென்றால் என்னவென்று தெரியவில்லை. கல்வி என்றால் என்ன என்று அவர்களுக்கு தெரியவில்லை. சுகாதாரம் என்றால் என்னவென்று புரியவில்லை.

**நாம் மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும்**

உங்களுக்கான வாழ்க்கையை தான் நீங்கள் அனுபவித்துக்கொண்டு உள்ளீர்கள் என உலகை நம்ப வைக்க முயற்சிக்கிறார்கள். சிக்கனம் என்ற பெயரில் பல மக்கள் நல திட்டங்களுக்கான நிதியை வெட்டி வருகிறார்கள். மக்களுக்கான எந்தத் திட்டமும் இல்லாத சூழலில் தான் வலதுசாரி இயக்கங்கள் வளர்கின்றன. மக்களை நம்புபவர்களாக, எதிர்காலம் சாத்தியம் என்று நம்புபவர்களாக உள்ள இடதுசாரிகளாகிய நாம் முதலாளித்துவத்தின் மீதான விமர்சனத்தோடு மட்டும் நின்று விடக்கூடாது. உலகம் முழுவதும் மிகப்பெரிய இயக்கத்தை நாம் உருவாக்க விரும்பினால் நம்மிடம் ஒரு திட்டம் இருக்க வேண்டும். மக்கள் நம்பிக்கையை நாம் உணர வேண்டும். எதிர்காலத்திற்கான நமது திட்டத்தில் அவர்கள் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

**சோசலிச எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு பதிலடி**

சோசலிசம் சாத்தியம் என்பதோடு அதுதான் அவசியமானது என மக்கள் ஏற்க வேண்டும். இன்னொரு உலகம் சாத்தியம் என்று சொன்னால் மட்டும் போதாது. சோசலிசத்தின் அவசியத்தையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். நாம் போராட வேண்டியது அதற்காகத் தான். சோசலிசம் சாத்தியமில்லை என்று பலர் நம்பிக் கொண்டுள்ளார்கள். "சோசலிசம் என்பது நல்ல யோசனை தான், ஆனால் அது சாத்தியமில்லை" என்று கூறுபவர்களும் உள்ளார்கள். சோவியத் யூனியன் அமைந்தது, அது இப்போது எங்கே இருக்கிறது? சோசலிசத்தை காகிதத்தில் வேண்டுமானால் நன்றாக பதிவு செய்யலாம் அனால் நீங்கள் அதை உலகில் அமைக்க முடியாது எனவும் கூறுகிறார்கள்.

இந்த சோசலிச எதிர்ப்பு பிரச்சாரத்தை உடைப்பது கடினமல்ல. நாம் நமது உறுதியான திட்டத்துடன் மக்களிடையே செல்ல வேண்டும். மக்கள் நலத் திட்டங்களை சோசலிச அரசு எவ்வாறு உருவாக்கும் மக்களுக்கு எப்படி கொண்டு செல்லும் என்பதை நாம் மக்களுக்கு உணர்த்த வேண்டும் அவர்களுக்கு சொல்லித் தர வேண்டும். முதலாளித்துவம் உருவாக்கிய பல நூற்றாண்டு காலப் பிரச்சனைகளை, தனியார் சொத்துடைமைகளால் தீர்க்க முடியவில்லை. கல்வி ஏற்றத்தாழ்வு, சுகாதார ஏற்றத்தாழ்வு போன்ற பிரச்சனைகள் முதலாளித்துவத்தில் மரபுவழியாக வந்து கொண்டே உள்ள பிரச்சனைகளாகும். ஆனால் முதலாளித்துவத்துக்கு அந்த பிரச்சனைகளை எப்படி தீர்ப்பது என்று தெரியவில்லை.

**தெளிவான திட்டம் கம்யூனிஸ்ட்டுகளிடம் உள்ளது**

முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்ட – சரி செய்ய முடியாத பிரச்சனைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது கம்யூனிஸ்டுகளுக்கு தெரியும். கம்யூனிஸ்டுகளிடம் மக்கள் பிரச்சனைகளை தீர்க்க தெளிவான திட்டம் உள்ளது. உங்கள் 'மாநாட்டு' பையில் என்ன இருக்கிறது? அதில் உள்ள ஆவணம் சமூக மாற்றத்திற்கான திட்டத்தை முன்வைக்கிறது. மக்களின் வளர்ச்சிக்கான பல்வேறு அம்சங்களைக் கொண்ட உறுதியான மாற்றுத்திட்டம்.

**சோசலிசத்தை இப்போதே துவங்கலாம்**

முதலாளித்துவம் இருக்கும் போது நீங்கள் சோசலிசத்தை உருவாக்க முடியாது என்று சிலர் வாதிடுகின்றனர். அது உண்மை இல்லை. நீங்கள் இப்போது கூட சோசலிசத்தை துவங்கலாம். உண்மையில் மக்கள் ஏற்கனவே சோஷலிசத்தில் வாழ்ந்துள்ளனர். அது சோவியத் யூனியன். சோவியத்தில் அவர்கள் சோசலிசத்தை உருவாக்கினர். அங்கு குடும்பம் நடத்த அதிக பணம் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மோசமான சுகாதாரமற்ற சூழலில் வாழ வேண்டிய நிலை இல்லை. அனைத்து மக்களுக்கும் வீடு இருந்தது. சோவியத் யூனியன் இருந்த 70 ஆண்டுகால வரலாற்றில் பெரிய அளவு சாதனைகளை செய்திருந்தது. கியூபப் புரட்சி அனைவருக்கும் கல்வி கொடுத்தது. சீனப் புரட்சி முழுமையாக மக்களின் வறுமையை போக்கியது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். சீனா முழுமையாக வறுமையை போக்கியுள்ளது. இது சோசலிசத்தை உருவாக்குகிற செயல்பாட்டில் தான் நடந்துள்ளது. இந்த சோசலிசப் பாதை தான் மக்களுக்கு வீடுகளை வழங்கி உதவியது. அது தான் கொரோனா தொற்றுநோயை வெல்ல அவர்களுக்கு உதவியது.

**நமக்கு எதிர்காலம் உண்டு**

மக்களிடம் சென்று, எதிர்காலம் இருக்கிறது; உங்கள் குழந்தைகள் கல்வி கற்க வாய்ப்பற்றவர்களாக இருக்க வேண்டியதில்லை; உங்கள் பெற்றோர்கள் மற்றும் உங்கள் பகுதியில் உள்ள மூத்த குடிமக்கள் போதிய மருத்துவ வசதிகள் இன்றியோ, சுகாதார பராமரிப்பு இன்றியோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை; பணக்காரர்களும் அவர்களின் பணமும் நமது மக்களின் வாழ்க்கையை துன்பப்படுத்துவது இனி தேவையில்லை; முதலாளித்துவத்தில் ஆரோக்கியம் இல்லை என்ற பிரச்சாரத்தை மேற்கொள்வோம்.

நமது மாநாட்டு ஆவணத்தைப் பார்த்து உலகில் இரண்டு சக்திகள் உள்ளன என்று மக்கள் புரிந்துகொள்வார்கள். நிச்சயமாக முதலாளித்துவம் என்ற அழிவின் சக்தி நமக்குத் தேவையில்லை. முதலாளித்துவத்திடம் இருப்பதெல்லாம் குண்டுகள், மிரட்டல்கள், பொருளாதாரத் தடைகள், கட்டாயமான சட்ட விரோத நடவடிக்கைகள் மட்டுமே. அவர்கள் ஆபத்தானவர்கள், அவர்களின் அழிவு கொள்கைகள் நமக்குத் தேவையில்லை. சீரழிவை நிராகரித்து உறுதியான வாழ்க்கைக்கான வழியாக கம்யூனிஸ்ட்களின் மாற்று திட்டத்தை உலகெங்கிலும் உள்ள

கோடிக்கணக்கான மக்கள் பார்க்க வேண்டும். சீரழிவைத் தரும் முதலாளித்துவத்தை நிராகரிப்பது மட்டுமல்லாமல், சோசலிசத்தை தழுவிக்கொள்ளவும் இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**சோசலிசம் அல்லது அழிவு**

தோழர்களே, நமக்கு இரண்டு தேர்வுகள் மட்டுமே உள்ளன. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில், மார்க்சும் ஏங்கெல்சும் எழுதினார்கள்: ஒன்று நாம் சோசலிசத்திற்கு முன்னேறுவோம் அல்லது வர்க்கங்களின் போட்டியில் அழிவை சந்திக்க நேரிடும். இன்றைய உலகத்தைப் பார்த்தால், அது ஒரு இடிந்த கட்டிடம் போல தெரிகிறது. காஸா அத்தகைய இடிபாடுகளில் உள்ள ஒரு இடம். காஸாவில் மட்டும் 2.8 கோடி தொன் குப்பைகள் உருவாகியுள்ளது. அந்த குப்பைகளை எல்லாம் மத்திய தரைக்கடலில் போட்டால், நீங்கள் ஒரு புதிய காஸாவையே உருவாக்கலாம். அந்த அளவுக்கு இஸ்ரேல் நடத்திய குண்டு வீச்சில் பலஸ்தீனர்களின் சொத்துக்கள் குப்பைகளாக மாற்றப்பட்டு உள்ளன. இதற்கு காரணம் அதி பயங்கர ஏகாதிபத்தியம்.

அழிவுகளை உருவாக்குவது மட்டும் தான் 'அதி பயங்கர ஏகாதிபத்தியத்திற்கு' தெரியும். உலகில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் அந்த அதி பயங்கர மிகை ஏகாதிபத்தியத்தை நிராகரிக்க வேண்டும் என்றால், நமது மக்கள் அந்த மிகை ஏகாதிபத்தியத்தின் உண்மை முகம் என்னவென்று புரிந்து கொள்ள வேண்டும். அதைப் புரிந்து கொண்ட மக்கள் அதிபயங்கர ஏகாதிபத்தியத்தில் இருந்து வெளியேற நினைத்தால், அதற்கு சரியான மாற்றுத் திட்டம் வேண்டும். அதுதான் நமது தோழர்கள் கூறும் சோசலிசம். அதற்கான ஆக்கப்பூர்வ வழிமுறைகளை உருவாக்கி உலகம் முழுவதும் உள்ள மக்களின் மனதிலே இந்த மாற்றுத்திட்டத்தை கொண்டு சென்று உலகத்தை காப்பாற்றுவோம்!

– சுருக்கமாகத் தமிழில்: சேது சிவன்

முழுமையான உரை:
https://www.youtube.com/watch?v=UPkS0a2i05Y

# இழப்புகளும் இடைவெளிகளும்

பொதுவாக இழப்புகள் என்பவை கவலைக்கும் விசனத்துக்கும் உரியவை. அதிலும் மனித இழப்புகள் வருத்தத்துக்குரியவை மட்டுமின்றி, சில வேளைகளில் இட்டு நிரப்ப முடியாதவையாகவும் அமைந்து விடுகின்றன.

குறிப்பாக, மக்களுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்த கம்யூனிஸ்ட்டுகளின் இழப்புகள் பாரிய இடைவெளியை ஏற்படுத்திச் சென்று விடுகின்றன. கடந்த சில வருடங்களில் உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பல கம்யூனிஸ்ட் தோழர்களை ஒருவர் பின் ஒருவராக நாம் இழந்து வந்திருக்கிறோம்.

அந்த வகையில் அண்மையில் இரண்டு மிகவும் பெறுமதி வாய்ந்த தோழர்களை இலங்கையின் வட பகுதியில் இழந்திருக்கிறோம். ஒருவர் சங்கானையைச் சேர்ந்த தோழர் பொ.கதிரேசு. மற்றவர் வடமராட்சியைச் சேர்ந்த தோழர் க.இராசரத்தினம். இருவரும் புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முழுநேர செயல்பாட்டாளர்களாக இருந்தவர்கள்.

தோழர் கதிரேசு தனது கல்வித் திறமையால் பேராதனை பல்கலைக்கழகத்துக்கு பட்டப்படிப்புக்காக தெரிவு செய்யப்பட்ட போதும், புரட்சிகர அரசியலில் நாட்டம் கொண்டு தனது படிப்பை இடைநிறுத்திவிட்டு மக்கள் பணிக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். இறுதி வரை மக்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், கூலித்தொழில் செய்து தனது வாழ்வை கொண்டு நடத்தியவர்.

தோழர் இராசரத்தினம் (இரத்தினம்) 1960களில் உலகம் முழுவதிலும், இலங்கையிலும், இலங்கையின் வட பகுதியிலும் ஏற்பட்ட புரட்சிகர எழுச்சிக் காலத்தில் கிளிநொச்சிப் பகுதி விவசாயிகள் மத்தியில் முழுநேரமாக வேலை செய்வதற்காக தன்னுணர்வுடன் முன் வந்தவர்.

இந்த இரு தோழர்களுமே சிறந்த புரட்சிகர புத்திஜீவிகள். மேலதிகமாக ஆங்கில அறிவையும் பெற்றிருந்த அவர்கள் தொடர்ந்து வாசித்து தமது மார்க்சிய தத்துவார்த்த அறிவை வளர்த்துக் கொண்டவர்கள். அந்த அறிவை மக்கள் மத்தியிலான வேலைகளில் பயன்படுத்தி கூர்மையான பட்டறிவையும் பெற்றவர்கள். அதன் காரணமாக தமிழ் சமூகத்தில் ஒரு கட்டத்தில் சூறாவளியென சுழன்றடித்த தேசியவாத புயலில சிக்காமல் நின்ற உருக்கு போன்ற கம்யூனிஸ்ட் மனிதர்கள்.

தோழர் ஸ்டாலின் வர்ணித்தது போல, "கம்யூனிஸ்ட்டுகள் உருக்குப் போன்ற வார்ப்பில் வார்க்கப்பட்ட புதிய மனிதர்கள்" என்பதற்கு இலக்கணமாக திகழ்ந்தவர்கள். இத்தகைய ஒரு மனிதனை சாதாரண வழிகளில் உருவாக்க முடியாது, என்ன விலை கொடுத்தும் வாங்கவும் முடியாது. அப்படியானவர்களின் இழப்பு இட்டு நிரப்ப முடியாததாகவும் அமைந்து விடுகிறது. ஆனால் அவர்கள் வரித்துக் கொண்ட இலட்சியங்கள் அடுத்த சந்ததியினரின் தோள்களினால் தொடர்ந்து சுமக்கப்பட்டு, நித்தியமாக வாழ்கின்றன. அந்த வகையில் அவர்கள் மரணித்தும் வாழ்கிறார்கள்.

தோழர்கள் கதிரேசு, இரத்தினம் என்ற இந்த இரு தோழர்களினதும் மறைவுக்கு எமது புரட்சிகர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்!

**–புதிய கம்யூனிஸ்ட் குழு**

---

பூர்ஷுவா பொருளாதாரவாதிகள், முதலாளித்துவத்தினது – தோற்றத்தின் சரித்திரத்தையும், முதலாளித்துவ சமுதாயத்தில் வர்க்கங்கள் உருவாவதைப் பற்றியும் தவறாக எடுத்துக் காட்டுகிறார்கள். கஷ்டப்பட்டு வேலைசெய்து சிக்கனமாக இருந்தவர்கள் முதலாளிகள் ஆனார்கள் என்றும், தங்கள் சொத்தையெல்லாம் ஊதாரித்தனமாக செலவிட்ட சோம்பேறிகள் தொழிலாளிகள் ஆனார்கள் என்றும் அவர்கள் வாதிடுகிறார்கள். இந்தக் கட்டுக் கதைகளுக்கும் வரலாற்று ரீதியான உண்மைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஆரம்ப மூலதனக் குவியல் சிக்கனத்தால் ஏற்பட்டதல்ல. மாறாக, காலனி நாடுகளைக் கொள்ளையடித்ததன் மூலமாகவும், பலவந்தமாக விவசாயிகளை ஓட்டாண்டியாக்கியதன் மூலமாகவும், முதலாளித்துவ உழைப்புக் கட்டுப்பாட்டை உண்டாக்கும் நோக்கத்துடன், ஏழைகளுக்கெதிராக கெடுபிடியான சட்டங்களை அமுலாக்கியதன் மூலமாகவும் தான் அது ஏற்பட்டது.

**–தி.கே.மித்ரோபோல்ஸ்கி**

# முன்னொருபோதும் இல்லாத சவாலை எதிர்நோக்குகின்றேன்!

*-பசில் ராஜபக்ச*



**கொ**ழும்பிலிருந்து வெளியாகும் ‘டெயிலி மிரர்’ (Daily Mirror) பத்திரிகையின் கெலும் பண்டாரவுக்கு (Kelum Bandara), சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ச (Basil Rajapakse) அளித்த பேட்டியின் முக்கியமான பகுதிகள்:

**கேள்வி:** நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தும்படி நீங்கள் கேட்டுக் கொண்டதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார். இது சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஒரு இடைவெளியை ஏற்படுத்துமா?

**பதில்:** நான் இந்தக் கருத்தை ஜனாதிபதியை இன்று சந்தித்தபோது சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். நான் இந்த கருத்தில் இருக்கிறேன். மற்றும்படி, ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்ற கருத்து ஒவ்வொருவருக்கும் இருக்கலாம். இருந்தபோதும், இந்த விடயம் காரணமாக சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடைவெளி ஏற்பட நாம் இடமளிக்க மாட்டோம்.

**கேள்வி:** நாடாளுமன்ற தொகுதி முறையில் மாற்றம் செய்வதற்கான சட்ட வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. உங்கள் கட்சி இதை ஆதரிக்குமா?

**பதில்:** நாங்கள் ஒரு கட்சி என்ற வகையில் அந்தப் பரிந்துரையைப் பார்ப்பதற்கு முன்னால் இதைப் பற்றிக் கருத்துக்கூற நாம் விரும்பவில்லை. உங்களிடமிருந்து மட்டுமே நான் இதை அறிகிறேன். முதலில் இந்த பரிந்துரையைப் பார்த்த பின்னர் யோசிக்கலாம்.

**கேள்வி:** சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சரவையில் அங்கம் வகிக்கையில் அதைப் பார்க்கவில்லை என்று நீங்கள் எவ்வாறு கூற முடியும்?

**பதில்:** அமைச்சரவை எமது உறுப்பினர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கவில்லை. அத்துடன், எமது உறுப்பினர்கள் கூட இதுபற்றி எமக்குத் தெரிவிக்கவில்லை.

**கேள்வி:** தேர்தல்களுக்கு நீங்கள் எவ்வாறு தயாராக உள்ளீர்கள்?

**பதில்:** நாங்கள் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் முகம் கொடுக்கிறோம். அந்தந்த நேரங்களில் திரும்பவும் எழுந்து மிதந்து கொள்கிறோம். நாங்கள் தேர்தல்களுக்கு மீண்டும் வெற்றிகரமாக முகம் கொடுப்போம்.

**கேள்வி:** நீங்கள் கடைசியாக ஜனாதிபதியைச் சந்தித்த போது, உண்மையில் தேர்தல்கள் சம்பந்தமாக என்ன விடயங்களைக் கலந்துரையாடினீர்கள்?

**பதில்:** நாங்கள் தேர்தல்கள் சம்பந்தமாக ஒரு விடயத்தை மட்டும் கலந்துரையாடவில்லை. இருந்தபோதிலும், சிறீலங்கா பொதுஜன பெரமுன ஒரு கட்சி என்ற முறையில், எதிர்கால தேர்தல்களில் ஜனாதிபதியை ஆதரிப்பது சம்பந்தமாக ஒரு முடிவை எடுக்கும் என்று சொன்னோம். மற்றும்படி, தனிப்பட்ட கட்சி உறுப்பினர்கள் அதைத் தீர்மானிக்க முடியாது. அதேநேரத்தில் கட்சித் தலைமையை மீறி எமது கட்சி உறுப்பினர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு வைக்க வேண்டாமெனவும் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டோம்.

**கேள்வி:** சிறீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்ட சிலர் ஜனாதிபதியுடன் தொடர்பில் உள்ளனர். உதாரணமாக, நாடாளுமன்ற உறுப்பினர்களான நிமல் லான்ஸா (Nimal Lanza), பிரசன்ன ரணதுங்க (Prasanna Ranatunga) போன்றவர்கள் கட்சியை மீறி ஜனாதிபதியுடன் தொடர்பில் உள்ளார்கள். அதன் காரணமாகத்தான் நீங்கள் அந்த வேண்டுகோளை விடுத்தீர்களா?

**பதில்:** ஆம், அதுவும் ஒரு காரணம். இருந்தபோதிலும், நிமல் லான்ஸா போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீண்ட காலமாக ஜனாதிபதியுடன் நேரடித் தொடர்பில் இருக்கின்றனர். ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பின் போது, அவர்கள் பகிரங்கமாக அவரை ஆதரித்தனர். கட்சிகளுடன் தொடர்பை வையுங்கள், தனிநபர்களுடன் அல்ல என்ன ஆலோசனையை மட்டுமே அவருக்கு நாம் எப்போதும் சொல்ல முடியும்.

**கேள்வி:** கோத்தபாய ராஜபக்சவின் அரசாங்கம் வீழ்ச்சியடைவதற்கு பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன. பெருந்தொற்று உங்கள் கையை மீறிப்போனதும் அவைகளில் ஒன்று. அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு வேறு சில தீர்மானங்களும் காரணமாக இருந்துள்ளன. உங்களது பார்வையில் எது பிரதானமான காரணம்?

**பதில்:** எனக்குத் தெரியாது. ஒரு அரசாங்கத்தை நடத்துகையில் தவறுகள் நிகழும். அத்தகைய தவறுகள் எதிரிடையான நிலைமைகளுக்கு இட்டுச்

செல்லும்.

**கேள்வி:** நான் கேட்பது அந்தக் காரணங்களை. அவை எவை?

**பதில்:** அவை பல. அவை பொருளாதார, அரசியல் மற்றும் சமூகவியல் காரணங்கள். தேர்தலில் மிகப்பெரும்பான்மையான ஆதரவைப் பெற்ற போதிலும், அது இறுதியில் துன்பகரமான முடிவாகிப்போனது. எமது வீழ்ச்சிக்கு அது ஒரு காரணம். அதிகப்படியான அதிகாரம்.

**கேள்வி:** உங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது. உங்களுக்கு அந்த அதிகாரம் இருக்கும் போது அரசியல் சாசனத்தைக்கூட மாற்றியிருக்கலாம். நீங்கள் அற்புதங்களை நிகழ்த்தியிருக்கலாம். இதைச் சொல்வது கடுமையாக இருந்தபோதிலும், அத்தகைய ஒரு பெரும்பான்மை உங்களுக்கு தீமையாக முடிந்துள்ளது. அது உண்மைதானே?

**பதில்:** எங்கேயென்றாலும் ஒரு அரசாங்கம் ஆக்கக்கூடிய பெரும்பான்மையைப் பெறுகிறதோ, அது விரைவில் வீழ்ச்சி காணும் என எதிர்பார்க்கலாம்.

**கேள்வி:** இலங்கையில் இது எவ்வாறு நிகழ்ந்தது? நீங்கள் அத்தகைய ஒரு பெரும் கூட்டத்தின் ஆதரவை இழந்தீர்களா?

**பதில்:** உலக வரலாற்றில் சக்கரவர்த்திகள் அளவுக்கதிகமான பலத்தையும் அதிகாரத்தையும் கொண்டிருந்ததை நீங்கள் காண முடியும். ஆனால், அந்த சக்கரவர்த்திகள் எதிர்பார்த்ததை விட முன்னதாக கவிழ்ந்து போனார்கள்.

**கேள்வி:** தற்போதைய உள்நாட்டுச் சூழலில், பெரும்பான்மை பலம் இருப்பதால் உங்களால் சட்டங்களை நிறைவேற்ற முடியும். இல்லையா?

**பதில்:** உங்களிடம் அதிக உறுப்பினர்கள் இருந்தால் உங்களுக்கு அதிக பிரச்சினைகள் ஏற்படும்.

**கேள்வி:** அந்த நேரத்தில் அரசியல் அமைப்பில் 20 ஆவது திருத்தத்தை உங்கள் விருப்பப்படி நிறைவேற்றினீர்கள். இது அரசாங்கத்தின் வீழ்ச்சியின் ஆரம்பம் என சிலர் விமர்சித்தனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** பல்வேறு தரப்பினரும் வெவ்வேறு வியாக்கியானங்களைத் தெரிவிக்கின்றனர். அதுதான் காரணமாக இருக்கலாம். அது காரணமில்லாமலும் இருக்கலாம். இப்பொழுது துண்டு துண்டாக பல கொடூரமான சரத்துக்கள் சேர்க்கப்படுகின்றன. நாம் அவ்வாறான சட்டங்களைக் கொண்டு வந்தால் எல்லோரும் துள்ளிக் குதிப்பார்கள். நாம் இணையப் பாதுகாப்பு சட்டத்தைக் (Online Safety Act) கொண்டு வந்திருந்தால் எப்படியான பிரதிபலிப்பு இருந்திருக்கும்? நாம் தனியார்மயப்படுத்தலை அறிமுகம் செய்திருந்தால் எப்படியான காட்சிகள் இருந்திருக்கும்? நாம் ‘வற்’ – Vat (பெறுமதி சேர் வரி)றை அதிகரித்திருந்தால், மின்சாரக் கட்டணம் போன்றவற்றை அதிகரித்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

**கேள்வி:** நீங்கள் ‘வற்’ அதிகரிப்பு மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றைய சட்டங்களை எதிர்க்கிறீர்களா?

**பதில்:** இது அவர்களுக்கு எதிரான விமர்சன முயற்சி அல்ல. நாங்கள் அத்தகையவற்றை அறிமுகப்படுத்தியிருந்தால், மக்கள் வித்தியாசமாக தமது பிரதிபலிப்பை வெளிப்படுத்தியிருப்பார்கள் என்பதை மட்டுமே சொல்கின்றேன்.

**கேள்வி:** 6.9 மில்லியன் வாக்குகளைப் பெற்ற ஒரு கட்சி என்ற வகையில் ஏன் உங்களால் மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்ற முடியாமல் போனது?

**பதில்:** உண்மையில் எமது 6.9 மில்லியன் வாக்குகள் 2020 பொதுத் தேர்தலின் போது 6.8 மில்லியனாகச் சுருங்கிவிட்டது.

**கேள்வி:** நாடாளுமன்றத்தில் உங்களுக்கு இருக்கும் அதிக எண்ணிக்கை மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குப் போதுமா?

**பதில்:** அதிகப்படியான பெரும்பான்மை எங்களுக்குப் பிரச்சினையாக மட்டுமே திரும்பியுள்ளது. 2020 தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் தேர்தல் ஆணையாளர் கூட எமது கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுமா என என்னிடம் கேட்டார். 150 உறுப்பினர்கள் பெறுவதற்குப் பதிலாக 130 முதல் 135 வரையான உறுப்பினர்கள் பெற்றால் நான் மகிழ்ச்சி அடைவேன் என அவருக்குச் சொன்னேன். அறுதியான அதிகாரம் பல்வேறு பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும். அளவுக்கதிகமான அதிகாரக் குவிப்பு உதவப் போவதில்லை.

**கேள்வி:** உங்கள் மூத்த சகோதரர் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச எழுதிய புத்தகத்தை நீங்கள் வாசிக்கவில்லை என்று சொன்னீர்கள். நீங்கள் ஒரு அரசியல்வாதி என்ற முறையில் நிறைய வாசிப்பீர்கள் என எனக்குத் தெரியும். ஏன் அந்தப் புத்தகத்தை வாசிக்கவில்லை?

**பதில்:** எனக்கு அந்தப் புத்தகம் கிடைக்கவில்லை. அதன் ஒரு பிரதியைப் பெற்று வாசிப்பதற்கு சிரமப்பட விரும்பவில்லை. ஊடகவியலாளர்கள் அந்தப் புத்தகத்திலுள்ள விடயங்களைத் தெரிவித்துள்ளதால், அந்தப் புத்தகத்தை வாசிக்க வேண்டிய தேவை எழவில்லை.

**கேள்வி:** உங்கள் சகோதரருடனான தொடர்பை நீங்கள் இழந்துவிட்டதால்தான் உங்களால் அந்தப் புத்தகத்தின் பிரதியைப் பெற முடியவில்லை. சரியா?

**பதில்:** நாங்கள் இருவரும் மற்றவரின் பாதையில் தலையிடுவதில்லை.

**கேள்வி:** அரசியலில் இப்பொழுது அவருடைய பாத்திரம் என்ன?

**பதில்:** அவர் அரசியலில் இருந்து விடுபட்டு அமைதியான வாழ்க்கை வாழ விரும்புகிறார். நான் கூட அப்படியான ஒரு வாழ்க்கையை வாழவே விரும்புகிறேன். ஆனால், நானாக அதிலிருந்து விலக முடியாது. இப்பொழுது நான் பழைய ஆள்.

**கேள்வி:** நீங்கள் உங்கள் இதயத்திலிருந்து இதைச் சொல்கிறீர்களா?

**பதில்:** முழுமையாக இதை நான் என் இதயத்திலிருந்தே சொல்கிறேன்.

**கேள்வி:** நீங்கள் இலகுவாக இதை கட்சிக்கு சொல்லிவிட்டு விலகிக் கொள்ளலாமே?

**பதில்:** உண்மையில் எனது ஓய்வு குறித்து தெரிவித்து விட்டேன். இதுவரை நான் அரசியலை விட்டு நீங்குவது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அரசாங்கத்தில் நான் எந்தப் பொறுப்பையும் வகிக்கவில்லை. அதேநேரத்தில் கட்சியிலும் நான் எந்தப் பதவியையும் வகிக்கவில்லை. இருந்தும் இதுவரையும் நான் அரசியலில் இருந்து

விலகி இருப்பது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**கேள்வி:** இன்று கூட சில அமைச்சர்கள் உங்களைச் சந்திக்க வந்ததாக அறிந்தேன். முக்கியமில்லாத ஒருவராக நீங்கள் இருக்கும் போது அவர்கள் ஏன் உங்களைச் சந்திக்க வருகிறார்கள்?

**பதில்:** அதுதான் விடயம். எனக்கும் தெரியாது.

**கேள்வி:** உங்கள் பெறாமகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச, இந்த நாட்களில் நாடு முழுவதும் பயணம் செய்து மக்களையும் சமூகத் தலைவர்களையும் சந்திக்கிறார். அவர் கட்சித் தலைமைக்குத் தயாராகுவதைக் காண முடிகிறது. அவர் அவரது தந்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போலவே தோற்றத்தில் காணப்படுகிறார். அவர் பொறுப்பெடுப்பதற்கு வசதியாக நீங்கள் விலகிக்கொள்ள முயற்சிக்கிறீர்களா?

**பதில்:** அவருக்குக் கொடுப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை. கட்சி சரியான நேரத்தில் தீர்மானிக்கும். நான் கட்சியில் எந்தப் பதவியையும் வகிக்க மாட்டேன்.

**கேள்வி:** இதன் அர்த்தம் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப் பதவி அவருக்காக இப்பொழுது தயார் செய்யப்பட்டுள்ளது என்பதா?

**பதில்:** என்னிடம் ஏதாவது இருந்தால்தான் அவருக்குக் கொடுக்க முடியும். மற்றும்படி, என்னத்தை நான் கொடுக்க முடியும்? சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் சிறீசங்கபாகு மன்னன் (King Sirisangabo) தனது குழந்தைகள் உட்பட எல்லாவற்றையும் கொடுத்தார். அப்படிச் செய்வதற்கு அவருக்கு எல்லாம் இருந்தது. நான் நாமலுக்கு என்னத்தைக் கொடுக்க முடியும்? கட்சியில் எனக்கு எதுவும் இல்லை. நாமல் அவற்றைத் தேடிக்கொள்ளட்டும்.

**கேள்வி:** மகிந்த ராஜபக்ச இல்லாத ஒருகாலத்தில் எப்படியான சவாலை நீங்கள் எதிர்நோக்குவீர்கள்?

**பதில்:** இது எனக்கு ஒரு பிரச்சினை. உலகத்தில் ஒரு செல்வாக்கு மிகுந்த தலைவர் இல்லாமல் போகும்போது அந்த வெற்றிடத்தை நிரப்புவது எப்பொழுதும் சவாலாகவே உள்ளது. நாங்கள் எங்கள் சொந்த வரலாற்றிலேயே இதற்கு உதாரணங்களைக் காணலாம். மாபெரும் மன்னர்களான துட்டுகெமினு (Dutugemunu) மற்றும் பராக்கிரமபாகு (Parakramabahu) போன்றோருக்குப் பின்னர் அவ்வாறான சவால்கள் ஏற்பட்டன.

ஒரு பாடசாலையில் ஒரு மகத்தான, முன்னுதாரணமான, ஆற்றல்மிக்க அதிபர் ஓய்வு பெறும்போது, அவருக்குப் பின் வருபவர் அத்தகைய சவால்களை எதிர்நோக்குவார். துடுப்பாட்டத்தில் (Criket) ஆற்றல்மிக்க தொடக்க ஆட்டக்காரர்கள் ஓய்வு பெறும்போது, அதற்கு ஏற்றவர்களைக் கண்டு பிடிப்பதில் மற்றவர்களுக்குச் சிரமம் ஏற்படும். மக்கள் எப்பொழுதும் புதிதாக வருபவர்களை முன்னர் இருந்தவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள்.

நான் 50 ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் இருந்துள்ளேன். ஒருபோதும் இப்படியான ஒரு சவாலை நான் எதிர்நோக்கியதில்லை. முதல் தடவையாக நிச்சயமற்ற ஒரு சூழலை நான் எதிர்நோக்குகின்றேன். நாடும் கூட இத்தகைய ஒரு நிலையிலேயே உள்ளது.

**கேள்வி:** அளவுக்கதிகமான பெரும்பான்மை பலம் அழிவில் முடியும் என முன்னர் நீங்கள் கூறினீர்கள். ஆனால் ஆக்கக்கூடுதலான அளவுக்கு குடும்ப உறுப்பினர்களின் ஈடுபாடுதான் வீழ்ச்சிக்குக் காரணம் என பொதுமக்கள் கருதுகிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** பொதுமக்கள் மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகல, மற்றும் குருநாகல் மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு எமது குடும்ப உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளனர். அப்படியிருக்க, அதிகபட்ச அதிகாரம் பிரச்சினையை உருவாக்கியது என்று எப்படிக் கூற முடியும்?

**கேள்வி:** அதிகமான ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களின் ஈடுபாடுதான் தோல்விக்குக் காரணம் என நீங்கள் கூற வருகிறீர்களா?

**பதில்:** அதிகபட்ச அதிகார குவிப்பு எப்படி முடிவுக்கு இட்டுச் சென்றது? அது சரியானது அல்ல.

**கேள்வி:** ராஜபக்சாக்களின் தேர்தல் தோல்விகளுக்கு பொதுமக்கள் மீது நீங்கள் குற்றம் சாட்ட முடியாது. குடும்ப உறுப்பினர்களுக்கு நியமனங்களை வழங்கியதில் நீங்களும் ஒருவர். இல்லையா?

**பதில்:** நாங்கள் மற்றவர்கள் பலருக்கும் நியமனங்களை வழங்கினோம். மக்கள் தமக்கு விரும்பியவர்களைத் தெரிவு செய்தார்கள்.

**கேள்வி:** நாட்டில் உணவு நெருக்கடி நிலவிய நேரத்தில் இரசாயன பயன்பாட்டு விவசாயத்துக்குத் தடை விதிக்கும்படி யார் திரு.கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆலோசனை வழங்கினார்கள்?

**பதில்:** எனக்கு இது பற்றித் தெரியாது. ஒரு தலைவர் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்னர் மற்றவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். ஒரு தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அவர் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

**கேள்வி:** நீங்கள் கிராமியப் பொருளாதாரத்தையும் விவசாயப் பொருளாதாரத்தையும் அறிந்தவர். அரசாங்கத்தின் ஒரு பொறுப்பு வாய்ந்த அங்கத்தவர் என்ற முறையில் அந்தப் பாதகமான தீர்மானம் குறித்து உணர்ந்திருக்கவில்லையா?

**பதில்:** நான் ஒருமுறை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த போது எண்ணெய் உற்பத்தி மரச் செய்கை (Palm Oil Cultivation) பற்றி உரையாடினோம். அந்த நேரம் ரஸ்ய – உக்ரைன் யுத்தம் ஆரம்பமாகியிருந்தது. உக்ரைன் இந்தியாவுக்கு மர எண்ணெய் விநியோகிக்கும் பிரதான நாடு. அப்பொழுது திரு. மோடி, மர எண்ணெய் விவசாயம் செய்வதற்கு உகந்த சிறந்த மூன்று நாடுகளில் இலங்கையும் ஒன்று என எனக்குக் கூறினார். 35 வருடங்களுக்கு உற்பத்தி செய்யும் எண்ணெயை வாங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்யலாம் எனவும் சொன்னார். சுற்றுச்சூழல் காரணங்களால் இலங்கை அந்த உற்பத்தியை நிறுத்திவிட்டது என்று சொல்லி அதை நான் வன்மையாக மறுத்தேன். திரு.மோடி அதற்கு மறுப்பேதும் தெரிவிக்கவில்லை. அதற்குப் பதிலாக, சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி விவசாயம் (Sunflower Oil Cultivation) செய்வது பற்றி தனது பேச்சை மாற்றினார். ஒரு தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் தலைமைத்துவத்திற்கு எனது ஆலோசனை இதுதான். ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டால், தலைவர் அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

# இலங்கையில் சீனாவின் கடன் பொறியா?

**2017** யூலையில் சீனாவினால் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன அரசாங்கத்துடன் தொடர்புடைய நிறுவனம் ஒன்றுக்கு 99 வருட குத்தகைக்கு கொடுப்பதென இலங்கை அரசாங்கம் அறிவித்தவுடன் மேற்கத்தைய மற்றும் இந்திய ஊடகங்கள் “பீஜிங்கின் கடன்பொறி” தந்திரத்துக்கு இது ஒரு உதாரணம் என்று சொல்லத் தொடங்கிவிட்டன.

வோசிங்டனில் இருந்த ட்ரம்ப் நிர்வாக அலுவலகர்கள் சீனாவின் கடன் தந்திரோபாயத்துக்கு இது ஒரு உதாரணம் என்ற கதையை வேகமாகப் பரப்பினர். 2018இல் அப்போதைய உதவி ஜனாதிபதி மைக் பென்ஸ் (Mike Pence), “கடன்பொறி இராஜதந்திரம்” (debt – trap diplomacy) என்ற வீணான வார்த்தையை அந்த நிர்வாகத்தின் கடைசி நாட்களில் தொடர்ந்து உச்சரித்து வந்தார்.

அம்பாந்தோட்டை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்ததால், சீனா இராணுவ நோக்கங்களுக்காக இந்த இடத்தை பிடித்துக் கொண்டதாக இந்திய, அமெரிக்க விமர்சகர்கள் கூறி வந்தனர்.

ஆனால், அம்பாந்தோடடை துறைமுகத்தை ஆதரித்த இலங்கையர்கள் இது இந்து சமுத்திரத்திலுள்ள வெற்றிகரமான கப்பல் பரிமாற்ற நிலையம் (Transshipment) எனக் கூறினர். மேற்குலகின் வீண் வாதங்களை முன்வைத்த அதன் ஆதரவாளர்கள், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் முக்கியமான பகுதியை வசதியாக புறம்தள்ளிவிட்டனர். இலங்கை, சீன எக்ஸிம் வங்கியிலிருந்து (China’s Exim Bankd) கடன் பரிமாற்றம் செய்யும் போது கவலையீனமான தவறு எதையும் செய்யவில்லை. இது 1.2 பில்லியன் டொலர்களுக்கான 99 வருட குத்தகை ஒப்பந்தமாகும்.

இந்தப் பணம் பெரும்பாலும் அமெரிக்க நிதி முகாமைத்துவங்களால் கட்டுப்படுத்தப்படும் சர்வதேச பிணைச் சந்தைகளிடமிருந்து (International Bond Markets) பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் இலங்கை எதிர்நோக்கிய நெருக்கடியைத் தணிப்பதற்காக இலங்கையின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பை பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.




இந்த கடன் பொறி என்ற வீணான கருத்து பரப்பப்படுவதற்கு அனுமதித்ததன் காரணம், “இலங்கைக்கு வியாபார திட்டத்தை உருவாக்குவதற்கான நோக்கம் எதுவும் இருக்கவில்லை, ஆனால் சீனாவுக்கு இருந்தது” என்பதற்காகவே இந்தத் துறைமுகம் உருவாக்கப்பட்டது என்பதைச் சொல்வதற்கே என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறையின் விரிவுரையாளர் பிரியங்க டுனுசிங்கே (Priyanga Dunusinghe) கூறியுள்ளார்.

“அம்பாந்தோட்டை விடயத்தைப் பொறுத்தவரையில், 99 வருடக் குத்தகைக்கு துறைமுகத்தைக் கொடுத்து 1.2 பில்லியன் டொலர்களைப் பெற்றுக் கொண்டது, சீனாவிடம் பெற்ற கடன்களைச் செலுத்துவதற்கு அல்ல” என, அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமத்தின் பிரதம செயல்பாட்டு அதிகாரி (Sri Lankan Chief Operating Officer of Hambantota International Port Group) திஸ்ஸ விக்கிரமசிங்Nf (Tissa Wickramasingke) தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர், “நாம் எங்கள் வியாபாரத்தை பாகுபடுத்தியிருப்பதால், எமது கைத்தொழில் வலயத்துக்கும், துறைமுகத்துக்கும் ஒளிமயமான எதிர்காலம் உண்டு” எனவும் தெரிவித்திருக்கிறார்.

அம்பாந்தோட்டை துறைமுக குழுமத்துக்கும் சீன வர்த்தக துறைமுகங்கள் நிறுவனத்துக்கும் (China Merchant Ports) இடையிலான இந்த கூட்டு முயற்சியில், சீன நிறுவனத்துக்கு 87 சதவீத பங்கும், இலங்கை நிறுவனத்துக்கு மிகுதி 13 வீதப் பங்கும் இருக்கின்றது. 99 வருட குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள துறைமுகத்தை அண்டியுள்ள 302 ஹெக்டர் நிலப்பரப்பு கைத்தொழில் வலயமாக அபிவிருத்தி செய்யப்படும்.

சீன வர்த்தகத் துறைமுகங்கள் நிறுவனம் ஒரு அரச நிறுவனமாக 1992 முதல் ஹொங்கொங் நிதி பரிவர்த்தனை அமைப்பால் (Hong Kong Stock Exchange) பட்டியல் இடப்பட்டுள்ளதுடன், உலகின் மிகப்பெரிய துறைமுக முகாமைத்துவ நிறுவனங்களில் ஒன்றாகவும் இக்கின்றது. அத்துடன், கிரீஸ், பெல்ஜியம், பிரான்ஸ் உட்பட 25 நாடுகளில் உள்ள 42 துறைமுகங்களில் பங்குகளையும் கொண்டிருக்கிறது.

இதன் விசாலமான துறைமுக வலைப்பின்னல் காரணமாக, அம்பாந்தோட்டை துறைமுக குழுமம் 2017இல் அதைப் பொறுப்பெடுத்த போது 300 ஊழியர்களைக் கொண்டிருந்த நிலையிலிருந்து தற்பொழுது 1,000 ஊழியர்களைக் கொண்டிருப்பதுடன், ஊழியர்களை வெளிநாடுகளுக்கு பயிற்சிக்கு அனுப்பும்

நிலையிலும் இருக்கின்றது என விக்கிரமசிங்கே கூறுகிறார்.

அம்பாந்தோட்டை துறைமுக குழுமம் இந்தத் துறைமுகத்தைப் பொறுப்பேற்ற நாளிலிருந்து இந்தத் துறைமுகத்தின் ஊடாக மாதாந்தம் 100,000 கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் இப்பொழுது கார் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதால், அம்பாந்தோட்டை துறைமுகம் தற்பொழுது மாதாந்தம்700,000 வாகனங்களை மறு பரிவர்த்தனை (Transshipment) செய்யும் இடமாக மாறியுள்ளது.

கிழக்கு – மேற்கு கடல் போக்குவரத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மிகப் பெரும் கப்பல்களுக்கு அம்பாந்தோட்டை துறைமுகம் மிகவும் உகந்த இடமாக இருக்கின்றது எனவும் விக்கிரமசிங்கே கூறுகின்றார்.

2020 – 23 காலகட்டத்தில் சீனாவுக்கான இலங்கைத் தூதுவராக இருந்த பாலித ஹோகோன (Palitha Kohona), இரண்டு நாடுகள் வர்த்தகம், துறைமுக முகாமைத்துவம் மற்றும் துறைகளில் இறுக்கமான தொடர்புகளைக் கொண்டிருப்பது ஆச்சரியத்துக்குரிய ஒன்றல்ல எனக் கூறுகிறார்.

"மற்றைய பல வளர்முக நாடுகளைப் போல, உயர் தொழில்நுட்பம், செலவு மலிவு போன்ற சீனாவின் முன்னேற்றகரமான ஆற்றல்கள் காரணமாக சீன நிறுவனங்களுடன் வேலை செய்வதற்கு இலங்கையும் தீர்மானித்துள்ளது'' என ஹோகோன கூறுகிறார்.

"இலங்கையில் சீனாவின் கடன் விடயம் அரசியல் நோக்கங்களை அடைவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. அம்பாந்தோட்டை துறைமுகம் இந்தப் பிராந்தியத்தில் கப்பலில் வாகனங்களை பரிவர்த்தனை செய்யும் மிகப் பெறுமதியான கடல் மாரக்க சொத்தாக இருக்கின்றது'' என ஹோகோன கூறுகிறார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் முதலில் ஸ்தாபிக்கப்பட்டதும், அங்கு அமைக்கப்பட்ட நிலக்கீழ் களஞ்சிய (Bunker) வசதிகளும் இயல்பாக கப்பல்களை கவரக்கூடியவை. ஆனால் அண்மையில் சீனாவின் இராட்சத எண்ணெய் நிறுவனமான சைனோபெக் (Sinopec) இலங்கையில் பெற்றோலிய சில்லறை வர்த்தகத்தில் பிரவேசித்திருப்பதும், பெற்றோலிய சுத்திகரிப்பு வர்த்தகத்தில் இறங்கியுள்ளதும், "விளையாட்டு – மாற்றக்காரனாக'' (Game Changer) அதை மாற்றியுள்ளது எனவும் ஹோகோன கூறினார்.

2023 நொவம்பரில் அம்பாந்தோட்டையில் 4.5 பில்லியன் டொலர்கள் பெறுமதியான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை (Oil Refinery) அமைப்பதற்கு சைனோபெக் நிறுவனத்துக்கு இலங்கை அரசாங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

கடந்த ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுக குழுமம் சைனோபெக் நிறுவனத்துக்கு களஞ்சிய வசதிகளைக் குத்தகைக்கு கொடுத்த பின்னர், ஏறத்தாழ 600,000 தொன்கள் களஞ்சிய வியாபாரம் நடைபெற்றுள்ளது. கப்பல்கள் களஞ்சியத்தைப் பயன்படுத்த துறைமுகத்துக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. மிதவைகள் (Barges) வந்து இங்கிருந்து எண்ணெயை எடுத்துச் சென்று கப்பல்களுக்கு விநியோகம் செய்யும்'' என விக்கிரமசிங்க கூறினார்.

"மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிப்பு ஆரம்பமானதும், சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள் இந்தத் துறைமுகத்தில் இருந்து ஏற்றுமதியாகும் மிகப்பெரிய நடவடிக்கைகள் நடைபெறும். கொழும்பு துறைமுகத்துக்குச் செல்லும் எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் அதன் பின்னர் அம்பாந்தோட்டைக்கு வரத் தொடங்கும்;'' எனவும் விக்கிரமசிங்க கூறினார்.

இந்த ஆண்டு Serenade of the Seas (கடல்களின் காதல் பாட்டு) என்ற கப்பல் உட்பட, இந்தியா, தாய்லாந்து, மாலத்தீவு ஆகிய நாடுகளின் பிரமாண்டமான 10 எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை புரிந்துள்ளன.

(கொழும்பு ஆங்கில ஊடகமொன்றில் வந்த கட்டுரையின் முக்கியமான பகுதிகள் இவை)

# சோஷலிசப் புரட்சிக்கான முன்தேவைகள் (புற-அக நிலைமைகள்)

**சோஷலிசப்** புரட்சி என்பது சமுதாயத்தின் வளர்ச்சியின் ஒரு தவிர்க்க முடியாத விளைவாகும். இப்புரட்சி முதலாளித்துவத்தால் தயாரிக்கப்படுகிறது. சோஷலிசப் புரட்சிக்குத் தேவையான புறவய, அகவய முன்தேவைகள் முதலாளித்துவத்தின் ஆழத்தில் பக்குவமடைகின்றன. முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்திச் சக்திகள் உயர் அளவான வளர்ச்சியை அடைகின்றன. உற்பத்தி ஒருமுனைப்படுத்தப்படுதல், சமூக உழைப்புப் பிரிவினையின் அதிகரிப்பு, உற்பத்தியின் தனித்தன்மைப்படுதல், கூட்டுப்படுதல் ஆகியவற்றின் அதிகரிப்பு ஆகியவற்றால் உற்பத்திக்கு ஒரு சமூகக் குணாம்சம் கிடைக்கிறது. தொழில் துறைகள், தொழில் நிலையங்கள் ஆகியவையும் எல்லா சமூக உற்பத்திப் பகுதிகளும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்குமாறு மாறியுள்ளன.

உலக முதலாளித்துவப் பொருளாதாரம் உருவாக்கப்படுகின்றது. உற்பத்திச் சக்திகளும் உற்பத்தியின் சமூகக் குணாம்சமும், பொருளாயத பொருள்களைத் தனதுரிமையாக்குவதில் சரியான ஒரு சமூக முறையையும், சோஷலிச உற்பத்தி உறவுகளையும் கோருகின்றன. சோஷலிசப் புரட்சிக்கு இந்த புறவய முன்தேவை, ஏகாதிபத்தியத்தில் அதனுடைய உயர் அளவு பக்குவத்தை அடைகின்றது. முக்கியமாக அரசு–ஏகபோக முதலாளித்துவத்தினை அடைகின்றது. ஏனெனில் லெனின் கூறியது போல் இதற்கும், சோஷலிசத்திற்கும் இடையில் எந்த இடைப்பட்ட படிகளும் இல்லை.

அதே நேரத்தில் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ சமுதாயத்தில் வளர்கிறது. அதிகமாக ஒருங்கமைக்கப்பட்டதாகவும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் அது மாறுகின்றது. நகர்ப்புற, நாட்டுப்புற உழைக்கும் மக்களுடன் கூட்டணி சேர்ந்தும், மார்க்சிய–லெனினியக் கட்சியின் வழி காட்டலின் கீழும், முதலாளிகளின் ஆட்சியை கவிழ்க்கக் கூடிய ஒரு வெல்ல முடியாத சமூக சக்தியாக அது வளர்கின்றது. இப்படித் தான் சோஷலிசப் புரட்சிக்கான அகவய முன் தேவை தோன்றி பக்குவமடைகிறது.

ஏகாதிபத்தியத்தின் உள், வெளி இரண்டிலுமான எல்லா முரண்பாடுகளின் அதிகரிப்பின் விளைவால், உலக ஏகாதிபத்தியச் சங்கிலித் தொடரின் பலவீனமான இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் சோஷலிசப் புரட்சி ஏற்படுகிறது.

**– எம்.என்.ரின்டினா, ஜி.பி.செர்னிக்கவ், ஜி.என்.ஹீடக்கோர்மவ்**

# இஸ்ரேலுக்கு இலங்கையர்களை அனுப்ப வேண்டாம்!




இஸ்ரேலில் விவசாயம், கட்டுமானப்பணி, பராமரிப்பு துறைகளில் பணியாற்றுவதற்காக 10,000 இலங்கையர்களை அனுப்புவதற்கு இலங்கை அரசாங்கம் இஸ்ரேலிய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதை ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் (United Federation of Labour) கண்டித்துள்ளது.

இது சம்பந்தமாக சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

“இஸ்ரேல் பலஸ்தீனியர்களுக்கு எதிராக இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ள சூழலில், இந்த ஒப்பந்தம் இலங்கைத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பற்ற, உயிராபத்தான சூழலை ஏற்படுத்துகின்றது.

பல தசாப்தங்களாக இஸ்ரேல் பலஸ்தீனத்தை ஆக்கிரமித்து, அதன் பொருளாதாரத்தை சீரழித்ததின் காரணமாக அங்கு வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவுவதால், பெரும் எண்ணிக்கையிலான பலஸ்தீனர்கள் வேலை வாய்ப்புக்கு இஸ்ரேலிலேயே தங்கியிருக்கின்றனர். இஸ்ரேலின் தற்போதைய ஆக்கிரமிப்பு நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்னர் ஏறத்தாழ 130,000 பலஸ்தீனியர்கள் இஸ்ரேலின் கட்டுமானத் தொழிலில் 65 சத வீதத்தையும், விவசாயத்தில் 25 வீதத்தையும் நிறைவேற்றி வந்தனர்.

ஆனால், இஸ்ரேல் தனது தற்போதைய பயங்கரவாதச் செயல்பாடுகளை பலஸ்தீனர்களுக்கு எதிராக ஆரம்பித்த பின்னர், ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்களின் வேலை அனுமதியை (Work Permit) இரத்துச் செய்துள்ளதுடன், அவர்களில் பலரை சிறையில் அடைத்தும், காஸாவுக்குத் திருப்பி அனுப்பியும் உள்ளது. அதனால் எழுந்துள்ள வேலையாட்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவே இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பப்படுகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஏமாற்றுத்தனமான அரசாங்கம், ஐ.நா. சபையில் போர் நிறுத்தத் தீர்மானங்கள் போன்றவற்றை ஆதரித்து சர்வதேச ரீதியில் பலஸ்தீனத்துக்கு ஒருமைப்பாடு தெரிவிப்பதாகக் காட்டிக்கொண்டு, மறுபக்கத்தில் இந்த மாதிரியான தொழிலாளர் ஒப்பந்தங்கள் மூலம் இஸ்ரேலுக்கு ஆளணி ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பெருமளவு உதவியைச் செய்கின்றது.

பலஸ்தீன மக்களின் உயிர்களைக் காப்பாற்றும் பொருட்டு நிரந்தர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துமாறு இஸ்ரேல் மீது சர்வதேச அழுத்தம் அதிகரித்து வருகின்றது. இந்த நிலைமையில், இலங்கை இஸ்ரேலில் புதிதாக துணைத் தூதரகங்களைத் திறந்தும், இஸ்ரேலுக்கு நேரடி விமான சேவைகளை ஆரம்பித்தும், இத்தகைய தொழிலாளர் ஒப்பந்தங்கள் மூலமாகவும், இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடன் உறவை வலுப்படுத்தி வருகின்றது.

இஸ்ரேல் பலஸ்தீனர்களுக்கு எதிராக இனப்படுகொலை நடத்தி வரும் சூழலில், இலங்கையின் இத்தகைய நடவடிக்கைகள் இந்தப் பிராந்தியம் முழுவதும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இஸ்ரேல் அரசு ஈரான், லெபனான், சிரியா போன்ற நாடுகளில் இராணுவ ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டு அதன் காரணமாக பிராந்தியத்தில் மோதல் நிலை உருவாகும் போது, இஸ்ரேலில் பணி புரியும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி, பிராந்தியம் முழுவதும் பணி புரியும் இலங்கைத் தொழிலாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படும்.

இஸ்ரேலுக்குச் செல்லும் இலங்கைத் தொழிலாளர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஸா நாணயக்கார (Manusha Nanayakara) உத்தரவாதங்களை வழங்கியிருப்பினும், அங்கு பணி புரியும் இஸ்ரேலிய தொழிலாளர்களுக்கு உரியதே இவர்களுக்கும் செல்லுபடியாகும்.

இலங்கைத் தொழிலாளர்கள் இஸ்ரேலில் பணி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் இஸ்ரேலிய அரசாங்கத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை உடனடியாக இரத்துச் செய்யும்படி நாம் கோருகின்றோம்.”

---

உண்மையான சோஷலிசம் நிலவும் நாடுகளில் உற்பத்திச் சாதனங்கள் சமுதாயத்திற்குச் சொந்தமாயிருக்கின்றன. உற்பத்தி உறவுகளின் தன்மையும் சோஷலிசத்தின் பொருளாதார அமைப்பும் இதனால் தான் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த நாடுகளில் உற்பத்திச் சாதனங்கள் மறுக்கப்பட்ட வர்க்கங்களோ, தனியுடைமையாளர் வர்க்கங்களோ கிடையாது. உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமையைப் பொறுத்தமட்டில் ஒருவரும் தனி சலுகை நிலையையோ அல்லது மற்றவரோடு ஒப்பிடுகையில் ஆதாயமற்ற நிலையையோ வகிக்கவில்லை. இதன் பயனாய் உற்பத்திச் சாதனங்களை மூலதனமாயும் உழைப்புச் சக்தியைப் பண்டமாயும் மாற்றும் வாய்ப்பு மறைந்தது. அத்தோடு, சமூக உடைமை மனிதனை மனிதன் சுரண்டுவதை அகற்றுகின்றது.

**– சமூக விஞ்ஞானம் (கி.ஷஹ்நஸாரவ், அ.போபரீக்கின், யூ.கிராஸின், வி.சுகதேயெவ்)**

# ரஸ்ய – உக்ரைன் போரில் இலங்கை கூலிப்படைகள்!

இலங்கையின் முன்னாள் படை வீரர்கள் ரஸ்ய – உக்ரைன் மோதலில் சம்பந்தப்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உக்ரைன் நாடு ரஸ்யாவுடன் போரில் ஈடுபட்டதைத் தொடர்ந்து, இராணுவத்தில் பணியாற்ற வேண்டிய வயதுடைய உக்ரைன் ஆண்கள் அதைத் தவிர்ப்பதற்காக அயலில் உள்ள ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். அதனால் போரில் ஈடுபடுவதற்கு வெளிநாடுகளில் இருந்து போர் பயிற்சி பெற்ற ஆட்களைத் தருவிக்க வேண்டிய எதிர்பார்க்காத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது நாட்டின் போர் பயிற்சி பெற்ற படையினர் ஒன்றில் இராணுவ முகாம்களில் இருக்கின்றனர் அல்லது அல்லது இராணுவ சேவையிலிருந்து விலகி இருக்கின்றனர். இப்படியானவர்கள் வெளிநாட்டில் உள்ள படை திரட்டும் நபர்களுக்கு இலகுவான இலக்காக உள்ளனர்.

ஊடக செய்திகளின்படி, இலங்கை இராணுவத்தின் ஒரு முன்னாள் மேஜர் ஜெனரலும், முன்னாள் சார்ஜனும் உள்ளூரில் படை திரட்டலுக்கு உதவியவர்கள் எனத் தெரிய வருகிறது.

யுத்தம் முடிவடைந்த பின்னர், முன்னாள் இராணுவ வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விசேட படிகள் (Special Allowances) நிறுத்தப்பட்டு விட்டன. அதனால் அவர்கள் இப்பொழுது தமது அடிப்படைச் சம்பளத்திலேயே தங்கியுள்ளனர்.

இலங்கை இராணுவம் தனது இணையத்தளத்தில், முன்னாள் படை வீரர்கள் சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு கூலிப்படைகளாக (Mercenaries) இணைவது கண்காணிக்கப்படுவதாக எச்சரித்துள்ளது. இராணுவத்தில் இருந்து தப்பியோடிய (Deserted) 12,000 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் (Discharged) என்ற செய்தியை எமது இணையப் பதிப்பில் மே 12 ஆம் திகதி தெரிவித்திருந்தோம்.

கொல் அல்லது கொல்லப்படு என்ற பயிற்சி மட்டும் வழங்கப்பட்டுள்ள இத்தகைய பெருந்தொகையானோர் இப்பொழுது நிச்சயமற்ற எதிர்காலம் உள்ள ஒரு குழுவாக இருக்கின்றனர். அவர்களுடைய விசேட தன்மைகள் காரணமாக, அவர்கள் சமூக (சிவில்) வாழ்க்கையில் இணைவதில் சிரமம் உள்ளவர்களாக இருக்கின்றனர். அவர்கள் வீட்டு நெருக்கடி காரணமாக, தனியார் பாதுகாப்பு நிறுவனங்களில் குறைந்த ஊதியத்திற்கு பாதுகாப்பு ஊழியர்களாகச் (Security Guards) சேர்வது அல்லது பாதாள உலக (Underworld) குழுக்களுடன் இணைவது என்ற சில தெரிவுகளே அவர்களுக்கு முன்னால் உள்ளன. பெரும்பாலான தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் (Private Security Firms) முன்னாள் இராணுவ அதிகாரிகளால் நடத்தப்படுவதுடன், அவர்கள் தமது ஊழியர்களுக்கு அற்ப சம்பளமே வழங்குகின்றனர்.



முதலில் ஒன்றைச் சொல்ல வேண்டும். சாதாரணமாக, இலங்கையில் நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்று தினசரி இரண்டு வேளை உணவை ஒரு மாதம் உண்பதற்கு ஒரு இலட்சம் ரூபா தேவைப்படுகிறது. ஒரு சராசரி பாதுகாப்பு ஊழியரின் சம்பளம் இதைவிட மிகவும் குறைவானதாகும். அண்மையில் முடிவடைந்த இனத்துவ யுத்தத்தின் (Ethnic War) போது எமது நாட்டுக்காக சேவை புரிந்த ஆண்களினதும் பெண்களினதும் கௌரவத்தை இந்த நிலைமை தூர வீசி விட்டுள்ளது. இதனால் பலர் பாதாள உலகக் குழுக்களுடன் இணைந்துள்ளனர். ஒரு குற்றச் செயலில் அல்லது கொலையில் முன்னாள் படை வீரர் சம்பந்தப்பட்டுள்ளார் என்ற செய்தியைக் கேட்காத நாளே இல்லை எனலாம்.

போரிடுவதற்குத் தேவையான பயிற்சி பெற்றுள்ள இந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் உக்ரைன் போர் குறைந்தபட்சம் நியாயமான சம்பளத்தை வழங்குகின்றது. எமது சகோதர ஏடான 'சண்டே ரைம்ஸ்' (Sunday Times) பத்திரிகையின் தகவலின்படி, கூலிப்படையினர் ஒவ்வொருவருக்கும் 2 மில்லியன் (20 இலட்சம்) ரூபாவுக்கும் மேற்பட்ட சம்பளம் வழங்கப்படுகிறது.

அரசாங்கம் கூட, போர் நடைபெறும் பல நாடுகளுக்கு 'சமாதான காவலர்கள்' (Peacekeepers) என்ற பெயரில் எமது படையினரை அனுப்புகின்றது. அங்கு அவர்களுக்கு மற்றைய சர்வதேச சமாதான காவலர்களுக்குரிய சமமான சம்பளம் வழங்கப்படுகிறது.

இத்தகைய காரணங்களால் – போதிய சம்பளமின்மை, வாய்ப்பின்மை – 2022 இல் 300.000 இற்கு (மூன்று இலட்சம்) மேற்பட்டோர் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர் என்பது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் (Sri Lanka Foreign Employment Bureau) புள்ளிவிபரத்தில் இருந்து தெரிய வருகிறது. பொருளாதார நெருக்கடி காரணமாக 2022 இல் 500,000 (ஐந்து இலட்சம்) இலங்கையர்கள் வேலையை இழந்ததாக உலக வங்கி (world Bank) கூறுகின்றது. வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களின் தொகை அதிகரித்துள்ளது. புதிய தனியார் வரி (personal Tax) மத்தியதர வர்க்கத்தினரையும் தாக்கியுள்ளது.

அரசாங்க புள்ளிவிபரத்தின்படி, 2016 இல் 650,000 ஆக இருந்த கடவுச்சீட்டு வழங்கலின் தொகை, முன்னொருபோதும் இல்லாத வகையில் 900,000 ஐ எட்டிப் பிடித்துள்ளது.

வாழ்க்கை நெருக்கடியில் இருக்கும் தமது குடும்ப உறுப்பினர்களுக்கு உணவளிக்கவும், தமக்கு ஒரு கௌரவமான வாழ்க்கையைத் தேடியும், பசுமையான இடங்களைத் தேடிச் செல்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

மோசடித்தனமான வெளிநாட்டுக்காரர்களின் நாசகாரமான இந்த நடவடிக்கைகளிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்க வேண்டும். இதிலுள்ள சிக்கல்களையும் ஆபத்துகளையும் மக்கள் அறிவார்கள். ஆனால் எமது அரசியல்வாதிகள் மக்களுக்கு வேறு வழி எதையும் விட்டு வைக்கவில்லை.

(கொழும்பிலிருந்து வெளியாகும் 'டெயிலி மிரர்' (Daily Mirror) பத்திரிகையின் மே 15 பதிப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் முக்கியமான பகுதிகள்)

**முன்பக்கத்தொடர்ச்சி...**

கருதுவது வடக்கு கிழக்கில் வாழ்கின்ற இலங்கையின் பூர்வகுடித் தமிழர்களைத்தான்)

இலங்கையில் சிறுபான்மை இனங்களின் விகிதாசாரத்தை எடுத்துக் கொண்டால் (2012 குடிசன மதிப்பீட்டின்படி) இலங்கைத் தமிழர்கள் 11.1 வீதம், முஸ்லீம்கள் 9.3 வீதம், மலையகத் தமிழர் (இந்திய வம்சாவழியினர்) 4.1 வீதம் என்ற நிலைமையே உள்ளது. எனவே, தமிழ் தரப்பிலிருந்து ஒருபொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தினால், அவர் ஒருபோதும் வெற்றிபெற மாட்டார் என்பது சிறுபிள்ளைக்குக்கூட புரியும். அப்படியிருக்க, சில தமிழ்த் தரப்பினர் ஏன் இந்த யோசனையை முன்வைக்கிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.

இந்தக் கருத்தை முன்வைப்பவர்கள் இரண்டு காரணங்களைக் கூறுகிறார்கள். ஒன்று, தமிழர்களின் ஒற்றுமையை உலகத்திற்குக் காட்ட வேண்டும் என்பது. (இதுவரை தமிழர்களின் எத்தனையோ விடயங்களை உலகிற்குக் காட்டியாயிற்று!) இரண்டாவது, தமிழர்களின் வாக்குகளைப் பெற்று சிங்கள அரசியல்வாதிகள் ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதைத் தடுக்க வேண்டும் என்பது. (ஆனால், இதற்கு முன்னர் தமிழர்கள் தமது வாக்குகளை யாராவது ஒரு சிங்கள வேட்பாளருக்கு அளித்து அவரை வெல்ல வைத்ததே வரலாறு. அத்துடன், தமிழர்கள் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்காவிடினும், கிடைக்கின்ற ஏனைய மக்களின் வாக்குகள் மூலம் யாரோ ஒருவர் வெற்றி பெற்று ஜனாதிபதியாக வரத்தான் போகிறார்)

இலங்கையின் தமிழ் தலைமைகள் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக காலத்துக்காலம் சில நிலைப்பாடுகளை முன்வைத்து வந்திருக்கிறார்கள். அதன்படி, முதலில் ஐம்பதுக்கு ஐம்பது, அடுத்தது, சமஸ்டி, பின்னர் தனிநாடு. இதில் தனிநாட்டுக்கான ஆயுதம் தாங்கிய போராட்டம் சுமார் 30 ஆண்டுகாலம் பலத்த பேரழிவுகளுடன் நடைபெற்று, இறுதியில் தோல்வியில் முடிந்தது. அதன் பின்னர், தமிழ் தலைமை இப்பொழுது மீண்டும் "ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு சமஸ்டியே" தமது தீர்வு என்று சொல்லி வருகிறது.

மறுபக்கத்தில், இனப் பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை அரசாங்கங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வாக மூன்று தீர்வுகள் இருந்தன. அவை: 1957இல் செய்து கொள்ளப்பட்ட பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை, 1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை, 2000ஆம் ஆண்டில் சந்திரிக அரசாங்கம் முன்வைத்த தீர்வுத்திட்டம் என்பன. இந்த தீர்வுத் திட்டங்களில் தமிழர் சம்பந்தப்பட்டிருந்தனர் அல்லது ஆதரித்திருந்தனர். இந்தத் திட்டங்கள் எல்லாமே ஐக்கிய இலங்கை என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன், அவற்றைத் தமிழர் தரப்பும் ஏற்றிருந்தன.

தமிழர் பிரச்சினைக்கு பிராந்திய ரீதியிலான அதிகாரப் பகிர்வே தீர்வு என்பதையே இந்த யதார்த்தவாத நடைமுறைகள் நிரூபித்து நிற்கின்றன. பொதுவாக எல்லாத் தமிழ் கட்சிகளினதும் நிலைப்பாடும் அன்றும் இதுதான். இடையில் தனிநாடு கோசம் எழுப்பப்பட்டதும், அதற்கான ஆயுதப் போராட்டம் நிகழ்ந்ததும் இலங்கைத் தமிழிர்களின் முழு வரலாற்றையும் எடுத்து நோக்குகையில் ஒரு தற்காலிக நிகழ்வே. இன்றைய உலக ஒழுங்கில் தனிநாடு என்பது தமிழர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அல்லது சாத்தியமாகக்கூடிய தீர்வு அல்ல என்பதே வரலாறு வழங்கிய படிப்பினை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது அவர் இலங்கையர் என்ற வகையில் நியாயமானதும் சட்டரீதியானதும் ஆகும்என்பது உண்மையே. இதற்கு முன்னரும் குமார் பொன்னம்பலம், எம்.கே.சிவாஜிலிங்கம் போன்றோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டிருக்கின்றனர். ஆனால், அவர்களை பிரதான தமிழ் கட்சிகள் எதுவும் ஆதரிக்காததுடன், தமிழ் பொதுமக்களும் ஆதரித்திருக்கவில்லை. (இன்றும் அதுதான் நிலைமை)

முன்பு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தமிழர்களுக்கும் இப்பொழுது போட்டியிட எண்ணுபவர்களுக்கும் ஒரு வேறுபாடு இருக்கின்றது. இப்பொழுது முனைபவர்கள் பொது வேட்பாளர் என்ற ரீதியில் தனிநபர்களாக இல்லாமல் இனத்துவ பிரதிநிதித்துவ அடிப்படையில் போட்டியிட எண்ணுகிறார்கள். இப்படிப் போட்டியிடுபவர்கள் வெற்றிபெற மாட்டார்கள் என்பது ஒருபுறமிருக்க, இந்த முயற்சி இன முரண்பாடுகளையும், இனங்களுக்களுக்கிடையே தப்பபிப்பிராயங்களையும் மேலும் அதிகரிப்பதற்கும் வழிவகுக்கும்.

இவர்கள் இப்படித் தனியாக ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்துவது சம்பந்தமாக மக்கள் மத்தியில் சில ஐயப்பாடுகளும் உள்ளன. அவையாவன:

ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை இனங்களின் வாக்குகள் முக்கிய பங்கு வகிக்கக்கூடிய ஒரு சூழலில் சிலர் தமிழர் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்த முற்படுவது, தமிழ் வாக்குகளைப் பிரித்து, ஒரு குறிப்பிட்ட ஒரு சிங்கள வேட்பாளரை வெற்றிபெற வைக்கும் தந்திரோபாயமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்திருக்கிறது. மக்கள் இப்படிச் சந்தேகிப்பதற்குக் காரணம், 2005 ஜனாதிபதித் தேர்தலின் போது புலிகள் தேர்தலை தமிழ் மக்கள் பகிஸ்கரிக்க வைத்ததின் மூலம் அந்தத் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை வெற்றிபெற வைத்தபடியால்தான். (புலிகளின் தந்திரோபாயம் வேறு நோக்கமாக இருந்தபோதிலும்)

தமிழ் கட்சிகளிடையே குழு வாதங்களால் எழுந்த ஐக்கியமின்மையே பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி என்ற கருத்தும் தமிழ் மக்களிடையே உண்டு.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு கோரியவர்கள், அதை நீர்த்துப் போகும் வகையில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவது பிழையான தந்திரோபாயம் என்ற கருத்தும் மக்கள் மத்தியில் பரவலாக உண்டு.

வழக்கமாக பிரதான வேட்பாளர்களிடம் பணப்பெட்டி வாங்கிக்கொண்டு அவர்களை ஆதரிப்பவர்கள், இம்முறை அதற்கு வாய்ப்பு இல்லாதபடியால்தான் பொது வேட்பாளர் எனப் பூச்சாண்டி காட்டுகிறார்கள் என்றும், ஆனால் இறுதி நேரத்தில் பேரம் பேசி பெட்டி வாங்கிக் கொண்டு பொது வேட்பாளர்

யோசனையைக் கைவிடுவார்கள் என்ற கருத்தும் மக்கள் மத்தியில் பரவலாக உண்டு.

இப்படியாக மக்கள் மத்தியில் பொது தமிழ் வேட்பாளர் பற்றிப் பல கருத்துக்கள் இருந்தாலும், பெரும்பாலான தமிழ் மக்கள் இந்த பொது வேட்பாளர் முயற்சி பற்றி அக்கறை செலுத்துபவர்களாக இல்லை.

இது ஒருபுறமிருக்க, சிறுபான்மை இனங்களைப் பொறுத்தவரையில், மலையகத்தின் பெரிய கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்கெனவே தமது ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிவித்துவிட்டது.

இந்திய வம்சாவழித் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மனோ கணேசன் தலைமையிலான இன்னொரு கூட்டணியும் ஏற்கெனவே சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கின்றது.

வடக்கு கிழக்கில் உள்ள இரண்டாவது பெரிய தமிழ் கட்சியான ஈ.பி.டி.பி.யும் தனது ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிவித்துவிட்டது.

முஸ்லீம் கட்சிகளைப் பொறுத்தவரை அவர்களது தெரிவு எப்பொழுதும் போல, ரணில் விக்கிரமசிங்க அல்லது சஜித் பிரேமதாசதான்.

இந்த நிலைமையில் இலங்கை சனத்தொகையில் 11.1 சத வீதத்தை மட்டும் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களின் ஒரு பிரிவினர் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தினால், அந்த வேட்பாளர் தனது மக்களின் 2 சத வீத வாக்குகளைத் தன்னும் பெறுவாரா என்பது சந்தேகமே.

இன்றைய சூழலில் தமிழ் அரசியல் சக்திகளுக்கு முன்னால் உள்ள ஒரு புத்திசாலித்தனமான வழி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக சில கோரிக்கைகளை முன்வைத்து ஒரு திறந்த கலந்துரையாடலை நடத்தி, அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்பவர்களை நிபந்தனையின் அடிப்படையில் ஆதரிப்பதுதான். அவர்கள் வெற்றி பின்னர் தமது நிலைப்பாட்டை மாற்றினால், அந்தக் கட்டத்தில் தமிழ் தலைமைகள் ஒன்றுகூடி அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கலாம்.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை பொது வேட்பாளர் என்ற தவறான தந்திரோபாயம் கெடுத்துவிடும் என்பதால், அதை சம்பந்தப்பட்டவர்கள் கைவிடுவதே இன்றுள்ள சூழலில் தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு நன்மை பயக்கும்.

# உலகில் மிக வேகமாக வெப்பமடையும் கண்டமாக மாறும் ஐரோப்பா

உலகிலேயே ஐரோப்பா மிக வேகமாக வெப்பமடையும் கண்டமாக மாறிவருவதாக ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. ஐரோப்பிய கண்டத்தின் வெப்பம் சர்வதேச சராசரியைவிட, இரண்டு மடங்கு வேகமாக அதிகரித்து வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இது மனிதர்களின் உடல்நலன், பனிப்பாறை உருகுதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அந்த அறிக்கை எச்சரிக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக வானிலை மையம் (World Meteorological Organization - WMO) மற்றும் ஐரோப்பிய யூனியனில் காலநிலை முகமை இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தான் இந்த அதிர்ச்சித் தகவல் இடம்பெற்றுள்ளது. இதனால் ஐரோப்பிய கண்டத்தில் உள்ள நாடுகள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை (renewable energy) நோக்கிய நகர்வை துரிதப்படுத்தினால், இந்த அபாயத்தில் இருந்து தற்காத்துக் கொள்ளலாம் என்றும் ஆலோசனை வழங்கியுள்ளது. ஐரோப்பிய கண்டம் கடந்த ஆண்டு தனது தேவையில் 43 சதவீத மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் உருவாக்கியுள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டில் 36 சதவீதமாகவே இருந்தது என்ற தகவலும் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

2015 ஆம் ஆண்டு பாரீஸில் காலநிலை தொடர்பாக 195 நாடுகள் இணைந்து ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டன. புவியின் அதிகரிக்கும் வெப்பநிலையை 2 டிகிரி செல்சியஸ்க்கு குறைவாக வைத்திருக்க வேண்டும் என்று உறுதி ஏற்றன. ஆனால், கடந்த ஐந்து ஆண்டுகள் புள்ளிவிவரங்களை ஒப்பிட்டால் ஐரோப்பிய கண்டத்தில் தொழில்புரட்சிக்கு முந்தைய அளவைக் காட்டிலும் வெப்பநிலை உயர்ந்து 2.3 டிகிரி செல்சியாக அதிகரித்துள்ளது.

இதனால். ஐரோப்பாவில் வெப்ப அழுத்தம், காட்டுத் தீ, வெப்ப அலைகள், பனிப்பாறைகள் உருகுதல், பனியளவு குறைவு, பனிப்பொழிவு இல்லாமை போன்ற காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன என்று ஐரோப்பிய யூனியன் செயலாக்கக் குழு துணை தலைவர் கோபர்னிகஸ் கூறுகிறார்.

உலக வானிலை மையத்தின் அறிக்கையானது இந்த ஆண்டு ஓர் எச்சரிக்கைக் குறிப்புடன் வந்துள்ளது. புவி வெப்பமயமாதலைத் தடுக்க இந்த உலக நாடுகள் போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இது இன்னும் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரும் என்று அந்தக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

உலகளவில் மார்ச் 2024, தொடர்ச்சியாக 10 ஆவது அதீத வெப்பநிலை கொண்ட மாதமாக பதிவாகியுள்ளது. ஐரோப்பிய கண்டத்தின் சமுத்திரங்களின் கடல் மேல்பரப்பின் சராசரி வெப்ப அளவு 2023 இல் மிக அதிகமாக புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

அதீத வெப்பத்தால் ஐரோப்பிய கண்டத்தில் மனித உயிரிழப்புகள் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு (2023) புயல், வெள்ளம், காட்டுத்தீக்கு 150 உயிர்கள் இரையாகின. கடந்த ஆண்டில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகள் 13.4 பில்லியன் யூரோக்களை எட்டியது.

இயல்புக்கு மாறான காலநிலைகளால் வெப்ப அலைகள், காட்டுத் தீ, வறட்சி, வெள்ளம் ஆகியன ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ளன. ஆல்ஃப்ஸ் (Alps) மலையில் கடந்த இரண்டாண்டுகளில் 10 சதவீத பனிப்பாறைகள் உருகியுள்ளன. இவ்வாறாக அந்த ஆய்வறிக்கையில் பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

# பலஸ்தீனம்: முழுமையான நீதி எப்போதுதான் கிடைக்கும்?



சர்வதேச நாடுகளின் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்காமல் காஸா மீது தொடர்ந்து இஸ்ரேல் தாக்குதல் நடத்திவரும் நிலையில், பலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரிக்க அயர்லாந்து, நோர்வே, ஸ்பெயின் ஆகிய ஐரோப்பிய நாடுகள் முன்வந்திருப்பது முக்கியமான திருப்புமுனை.

இது இஸ்ரேலுக்குத் தார்மிக அழுத்தத்தையும், பலஸ்தீனத்துக்கு அதன் எதிர்காலம் குறித்த சிறு நம்பிக்கையையும் உருவாக்கியிருக்கிறது. அதேவேளையில், இதன் மூலம் பலஸ்தீனத்துக்கு முழுமையான விடிவுக்காலம் பிறந்துவிட்டதாகவும் நம்பிவிட முடியாது.

2023 ஒக்ரோபர் 7 இல் இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து – கடந்த ஏழு மாதங்களாக – காஸா மீது தொடர் தாக்குதலை இஸ்ரேல் நிகழ்த்தி வருகின்றது. பலஸ்தீனர்கள் உயிர் பிழைக்க இறுதி நம்பிக்கையாக இருக்கும் ரஃபா நகர் மீதும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்கின்றன.

இதையடுத்து, இஸ்ரேலின் போர்க்குற்றங்கள் தொடர்பாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு, பாதுகாப்புத் துறை அமைச்சர் யுவாவ் கலான்ட் ஆகியோர் மீது கைது ஆணை பிறப்பிக்கக் கோரவிருப்பதாக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் (International Criminal Court – ICC) தலைமை வழக்கறிஞர் கரீம் கான் (Karim Khan) மே 20 இல் அறிவித்தார்.

போர் நிறுத்தம் தொடர்பாக இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான பேச்சுவார்த்தைகளில் இன்னும் தீர்வு எட்டப்படாத நிலையில், ரஃபா நகர் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றமும் இஸ்ரேலுக்கு உத்தரவிட்டிருக்கிறது.

இந்தச் சூழலில், அயர்லாந்து, நோர்வே, ஸ்பெயின் நாடுகள் பலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரிக்கத் தீர்மானித்திருப்பது இஸ்ரேலுக்குத் தார்மீகரீதியில் பலத்த நெருக்கடிகளைக் கொடுத்திருக்கின்றது. ஏராளமான குழந்தைகள் உள்பட 35000 பேரை இழந்து தவித்துக் கொண்டிருக்கும் பலஸ்தீனம், இந்த அறிவிப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கின்றது.

இஸ்ரேல் – பலஸ்தீனப் பிரச்சினையில் இரட்டை நிலைப்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் அமெரிக்கா, இதுபோன்ற நகர்வுகளை வீரியமிழக்கச் செய்வதில் முனைப்புடன் செயற்படுகிறது. இஸ்ரேல் தலைவர்கள் மீதான கைது ஆணை தொடர்பான கரீம் கானின் அறிவிப்பை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நிராகரித்திருப்பது ஓர் உதாரணம்.

அதேபோல், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அதன் மூலம்தான் பலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரிக்கும் முடிவை எடுக்க வேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்திருக்கின்றது. போர் நிறுத்தம் தொடர்பாக ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களையும் அமெரிக்கா தடுத்து நிறுத்தி வருகின்றது.

ஏற்கெனவே, 140 இற்கும் மேற்பட்ட நாடுகள் பலஸ்தீனத்தைத் தனிநாடாக அங்கீகரித்திருக்கின்றன. எனினும், ஒரு பிரதேசத்துக்குத் தனி நாடு என்னும் அந்தஸ்தை வழங்குவதற்குச் சர்வதேசச் சட்டங்கள் அவசியம். உலக நாடுகள் அங்கு தத்தமது தூதரகங்களை அமைத்துத் தூதரக உறவைத் தொடங்குவதும் முக்கியமானதாகும்

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் பலஸ்தீனத்தின் பெரும்பாலான பகுதிகள் இருப்பதால், காஸா, ரமல்லா (Ramellah), கிழக்கு ஜெருசலேம் ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்ட பிரதிநிதித்துவ அலுவலகங்கள் வழியேதான் பலஸ்தீனத்துடனான உறவைப் பல நாடுகள் பேணிவருகின்றன. இந்நிலையில், மூன்று ஐரோப்பிய நாடுகளின் இந்தத் தீர்மானம் ஓரளவு நம்பிக்கை அளித்தாலும், பலஸ்தீனத்துக்கு முழுமையான நீதி கிடைக்கச் சர்வதேசச் சமூகம் இன்னும் நெடுந்தூரம் பயணித்தாக வேண்டும் என்பதே நிதர்சனம்!